Registered as a News paper

பக்கங்கள் 10

விலை 07/=

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு

மக்கள் நாளிதழ்

Eezhanatham

சகல விதமான அச்சு வேலைகளுக்கும்

நித்தி பதிப்பகம்

பிரதான வீதி

கொக்கட்டிச்சோலை

தொலைபேசி 065.2226110

நாதம் 01 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 09 | 21.02.2005 திங்கட்கிழமை | ஓசை 254

## அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சீனு எங்கே?

### வைத்தியர்கள் ஏமாற்றுவதாக தந்தை புலம்பல்

(நமது நிருபர்)

சுனாமிப் பேரலையால் காயமடைந்து அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பாண்டிருப்பைச் சேர்ந்த கிசாந்தன் (சீனு) எனும் சிறுவனை வைத்தியசாலை இதுவரை உறவினர்களிடம் காட்டாது மறைத்து வைத்திருப்பதாக சிறுவனின் தந்தை விநாயகமூர்த்தி சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

தனது மகனைத் தேடி அம்பாறை வைத்தியசாலைக்கு சென்றபோது இக்னியாகல வைத்தியசாலை என தெரிவித்ததாகவும், இக்கினியா

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## மனோகரன், தயாபரன் இருவருக்கும் புலிகள் நாட்டுப்பற்றாளர் கௌரவம்

(நமது நிருபர்)

வந்தாறுமூலையில் கடந்த வருடம் நவம்பர் 24ம் திகதி தேசவிரோதிகளின் துப்பாக்கிச் சூடடில் உயிரிழந்த இருவரையும் நாட்டுப்பற்றாளர்கள் என பதவி நிலை வழங்கி விடுதலைப்புலிகள் கௌரவித்துள்ளனர்.

வந்தாறுமூலை சந்தை வீதியைச் சேர்ந்த சண்முகம் தயாபரன் (பிறந்த திகதி 05.11.1972), நாட்டுப்பற்றாளர் தயாபரன் எனவும், விஷ்ணு வித்தியாலய வீதியைச் சேர்ந்த சம்புநாதன் மனோகரன் (பிறந்த திகதி 15.02.1957) நாட்டுப்பற்றாளர் மனோகரன் எனவும் விடுதலைப்புலிகள் பதவி நிலை வழங்கி கௌரவித்துள்ளார்கள் என அறிவித்துள்ளனர்.

# வெலிக்கந்தைப் பகுதியில் துப்பாக்கிச் சூடு

# தேசவிரோத கும்பலைச் சேர்ந்த ஒருவர் பலி!

### மற்றொருவர் படுகாயம், பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதி

(நமது நிருபர்)

**வெலிக்கந்தைப் பிரதேச த்தின் முத்துக்கல்லுக்கும் கறுப்பளைக்குமிடையே நேற்று முற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிறிலங்காப் படையினருடன் இணைந்து செயற்படும் தேசவிரோதக்கும்பலைச் சேர்ந்த ஒருவர் பலியானதுடன் மற்றுமொருவர் காயமடைந்து பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.**

உயிரிழந்தவர் வில்லிய சிங்கம்- மனோகரன் எனவும், காயமடைந்தவர் சுதாகர் என அழைக்கப்படும் வினாயகமூர்த்தி ஜெகநாதன் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முத்துக்கல் பகுதியிலிருந்து கறுப்பளைக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுக்கொண்டிருந்த

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## ஓட்டமாவடியில் துப்பாக்கி சூடு

## தேச விரோதி ஒருவர் படுகாயம்

(நமது நிருபர்)

ஓட்டமாவடிப் பகுதியில் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் தேசவிரோதக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்துள்ளனர்.


கிரானைச் சேர்ந்த வடிவேல் ரவிச்சந்திரன் என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

இவர் உடனடியாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதித்த போது தான் சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் கருணா குழுவைச் சேர்ந்தவர் என்றும் தான் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவது பாதுகாப்பு இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து மேற்படி நபர் பொலனறுவை வைத்தியசா

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## அமெரிக்க கொடிக் கப்பல் இலங்கை வருகை!



(நமது நிருபர்)

அமெரிக்க கடற்படையின் 7வது கப்பற் தொகுதிக் கொடிக் கப்பலான "புளு றிட்ஜ்" நேற்றுக்காலை கொழும்புத்துறை முகத்தை வந்தடைந்தது.

இது ஒரு நல்லெண்ண விஜயம் என இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரக செய்திகள் தெரிவிக்கின்ற போதும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியின் இலங்கை விஜயத்துடன் தொடர்புபட்டதாக இக்கப்பலின் வருகை அமைந்துள்ளதாகவும் வேறுசில வட்டாரங்கள் கூறுகின்றன.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## வீரக்கொடப் பகுதியில் தமிழ் பேசும் சிறார்கள் மறைத்து வைப்பு!

(நமது நிருபர்)

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் காயமடைந்து அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பல சிறார்களை வைத்தியர்கள் கடத்தி இரகசியமாக மறைத்து வைத்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தின் வீரகொட மற்றும் அம்பாறை வைத்தியசாலையை சுற்றியுள்ள பகுதிகளிலும் மறைத்து வைத்திருப்பதாக அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை பாண்டிருப்பு

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## நிவாரணம் கோரி இன்று போராட்டம்

(நமது நிருபர்)

மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதியில் சுமார் 75 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனக்கோரி இன்று எதிர்ப்புப் போராட்டம் நடத்தப் போவதாக இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## சொல்ஹெய்ம் மட்டு வருகிறார்

(காத்தான்குடி நிருபர்)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நாளை செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வருகை தரவு

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

### இன்றைய நாளில்

**மருத்துவ விஞ்ஞானி**

**சேர் அலெக்சாண்டர் பிளேமிங்**

**06.08.1881–11.03.1955**



பென்சிலின் மருந்தினை கண்டுபிடித்த சேர் அலெக்சாண்டர் பிளேமிங் 11.03.1599 இவரது கண்டுபிடிப்பு 2ஆவது உலகப்போரின் போதும் அதற்குப் பின்னரும் ஏராளமான உயிர்களை காத்து வருகின்றது. இவர் மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்

## இதயவீணை ஒலிபரப்பால் நலன்புரி நிலைய மக்கள் விசனம்

(நமது நிருபர்)

ஈ.பி.டி.பி.யினரின் இதயவீணை ஒலிபரப்பை அம்பாறை மாவட்ட அகதி முகாம்களில் அதிரடிப்படையினர் ஒலிபரப்புச் செய்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நலன்புரி நிலையங்களில் கலாசார சீர்கேடுகளை ஏற்படுத்தும் வகையிலான திரைப்படங்கள் ஒலிபரப்பப்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான இந்த இதயவீணை ஒலிபரப்பை முகாம்களில் ஒலிபரப்புவது கலாசார சீரழிவுப் படங்களை ஒளிபரப்புவது என்பது சிறிலங்கா படையினரின் பேரினவாத வெளிப்பாடு எனவும் இவர்கள் கவலை தெரிவித்தனர்.

## வாழைச்சேனை அரசியல் அலுவலகம் முன்பாக சந்தேக நபர்கள் நடமாட்டம்

### கண்காணிப்பு குழுவிடம் முறையீடு

(நமது நிருபர்)

வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகத்துக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு சந்தேகத்திற்கிடமானவர்களின் நடமாட்டம் காணப்பட்டதாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூவர் ஆயுதங்களுடன் மோட்டார் சைக்கிள்களில் அலுவலகச் சுற்றாடலில் நடமாடுவது விடுதலைப் புலிகளினால் அவதானிக்கப்பட்டது.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் 2862 சிறார்கள் பெற்றோரை இழந்துள்ளனர்

(நமது நிருபர்)

தமிழர் தாயகப் பகுதிகளில் ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் 2,862 சிறுவர்கள் பெற்றோர்களை இழந்திருப்பதாக வடக்கு கிழக்கு மாகாண சிறுவர் பாதுகாப்பு திணைக் களம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் 2,125 பேர் தாய் அல்லது தந்தையை இழந்துள்ளார்கள். 737 பேர் இருவரையும் இழந்துள்ளார்கள். தாய் அல்லது தந்தையை இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை அம்பாறை மாவட்டத்திலேயே அதிகமாக உள்ளது. மாவட்ட ரீதியான விபரங்கள் வருமாறு:

அம்பாறை மாவட்டம்-954, மட்டக்களப்பு மாவட்டம் - 699, முல்லைத்தீவு மாவட்டம் 393, யாழ் மாவட்டம்-47, திருகோணமலை மாவட்டம் 32 என இந்த எண்ணிக்கை 2,125 ஆகும். தாயையும், தந்தையையும் இழந்த சிறுவர்களின் எண்ணிக்கை மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகமாகவுள்ளது. அதாவது இம் மாவட்டத்தில் பெற்றோர் இருவரையும் இழந்தோர் எண்ணிக்கை 406 ஆகும். ஏனைய மாவட்ட விபரங்கள் வருமாறு:

அம்பாறை மாவட்டம் - 162, திருகோணமலை மாவட்டம் - 35, முல்லைத்தீவு மாவட்டம் - 94, யாழ் மாவட்டம் - 39, கிளிநொச்சி மாவட்டம் - 01 என இந்த தொகை 737 ஆகும்.

## அம்பாறை மாவட்டத்தில் 1035 மீனவர்கள் பலி!

(நமது நிருபர்)

ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் 1,035 மீனவர்கள் பலியாகியுள்ளனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் ஆகக் கூடுதலான மீனவர்கள் இம் மாவட்டத்திலேயே உயிரிழந்துள்ளார்கள் என அம்பாறை மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் எஸ்.ரி.ஜோர்ஜ் தெரிவித்துள்ளார்.

இம் மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் கடற்றொழிலுக்கும், கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கும் எற்பட்ட சேதங்களின் பெறுமதி 500 கோடிக்கு மேல் என்றும்,அவரது தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது. இம்மாவட்டத்தில் கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களைப் பொறுத்தவரை 3,250 மீனவர்களின வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. இதற்கு பதிலாக புதிய வீடுகள் அமைப்பதற்கு 1,615 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. 1,735 வீடுகள் பகுதியாகச் சேதமடைந்துள்ளன. இவற்றைத் திருத்துவதற்கு 247 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. 7,501 மீனவ குடும்பங்களைச் சேர்ந்த 35,235 பேர் இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் அகதிமுகாம்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். மீனவர்களின் படகு, தோணி உட்பட மீன்பிடி உபகரணங்களுக்கு ஏற்பட்ட சேதம் 130 கோடி ரூபா. மீனவர் நலன்புரி நிலையங்கள், மீனவ காரியாலயங்கள், மீனவ தங்குமிடங்கள் ஆகியவற்றிற்கு ஏற்பட்ட சேதம் 15 கோடி ரூபா என்ற விபரங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

## கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் உடல் வலுவூட்டல் வளாகம்.

(நமது நிருபர்)

தமிழீழவிடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் சங்கரின் நினைவாக கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் உடல் வலுவூட்டல் வளாகம் நேற்று முன்தினம் மாலை வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி கே.கனகராசா தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.வேதநாயகம் வலுவூட்டல் வளாகத்தை திறந்துவைத்தார். இதற்கு முன்னர் பொதுச்சுடரை விடுதலைப் புலிகளின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஏற்றிவைத்தார்.

விளையாட்டுத் துறை உத்தியோத்தர்கள், வீரர்கள், ஆர்வலர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## சிங்கப்பூர் வாழ் தமிழர்களினால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவித் தொகை.

(நமது நிருபர்)

சிங்கப்பூர் வாழ் தமிழர்களினால் ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணியளவில் சர்வதேச தமிழ் மாணவர் பேரவையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த்தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச தமிழ் மாணவர் பேரவையின் அனுசரணையுடன் இந் நிகழ்வு நடைபெறவிருக்கின்றது.

சர்வதேச தமிழ் மாணவர் பேரவையின் இணைப்பாளர் ந.கண்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் யாழ்ப்பாண பயிற்சி நிலைய முகாமையாளர் ச.பிரதீபன் ஆகியோர் விருந்தினர்களாக் கலந்து கொண்டு கொடுப்பனவுகளை வழங்கவுள்ளனர்.

## பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா பாட நெறிக்கு விண்ணப்பம் கோரல்.

(றிஸ்வானுல் ஜன்னா)

தேசியக் கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்படும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி 2005, 2006 ஆம் வருடத்திற்கான விண்ணப்பங்களை தேசியக் கல்வி நிறுவகம் தற்போது கோரியுள்ளது.

அரசாங்கப் பாடசாலை ஒன்றில் பட்டதாரி ஆசிரியராகக் கடமையாற்றும் ஒருவர் அல்லது கல்விச் சேவையில் உள்ள ஒருவர் இப்பாடநெறியைப் பயில முடியும்.

இதற்கான தெரிவுகள் நேர்முகப் பரீட்சை அடிப்படையில் இடம் பெறும் என அறிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் மார்ச் மாதம் 7ம் திகதி வரை மகரகமை தேசிய கல்வி நிறுவகத்தில் இதற்கான விண்ணப்பங்களைப் பெற்று மார்ச் மாதம் 28ம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என்வும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இப்பாடநெறிக்கு என வடக்கு, கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை ஆகிய இடங்களில் மத்திய நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர கொழும்பு, கண்டி, ஆகிய பிரதேசங்களிலும் தமிழ் மொழி மூல மத்திய நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

## இடமாற்றம் அனைத்தும் மார்ச் மாதம் முதல் நடைமுறைக்கு.

(றிஸ்வானுல் ஜன்னா)

சுனாமி அனர்த்தம் காரமாக பிற்போடப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணம், இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான (2005ம் ஆண்டுக்குரிய) வருடாந்த இடமாற்றங்கள் யாவும் எதிர்வரும் மார்ச் மாதம் 1ம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் என மாகாண பொது நிருவாக அமைச்சின் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரம் அறிவித்துள்ளார்.

இடமாற்றக் கட்டளை வழங்கப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் மார்ச் முதலாம் திகதி தொடக்கம் தத்தம் புதிய நிலையங்களில் கடமைக்குச் சென்று அறிக்கை செய்ய வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களை அவர்களது முன்னைய அலுவலகங்களில் மார்ச் முதலாம் திகதி ஒப்பமிட அனுமதிக்கக்கூடாது எனவும் இப்படியானவர்களுக்கு மார்ச் மாத சம்பளம் வழங்கப்படக் கூடாது எனவும் அமைச்சின் செயலாளர் திணைக்களத் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

சுனாமிப் பேரலை காரணமாகத் தமது வீடு வாசல்களை இழந்து இன்னமும் அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்ச மடைந்திருக்கும் உத்தியோகத்தர்கள் தாம் வசிக்கும் பிரதேசத்தை விட்டு வேறு பிர தேசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பின் அவர்களின் இடமாற்றம் மீளாய்வு செய்யப்படும்.

ஆனால் ஒரு பிரதேசத்திற்குள் உள்ள அலுவலகங்களுக்கிடையே இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் எக்காரணம் கொண்டும் மீளாய்வு செய்யப்படவோ, இரத்துச் செய்யப்படவோ மாட்டாது எனவும் செயலாளர் தெரிவித்துள்ளார்.



களுதாவளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவசாயிகளுக்கான கடன் வழங்குதல் விவசாய துணை இயந்திரங்கள் உள்ளிட்ட பல செயற்திட்டம் சம்மந்தமாக யூ.என்.டி.பி.ஸ்தாபனத்தினர் களுதாவளை விவசாயிகளுடன் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம். (படம்:- அ.நிசாந்)

## செய்தித் துளிகள்

### விரிபுபடுத்தும் திட்டம்.

(றிஸ்வானுல் ஜன்னா)

கல்வி அமைச்சும், சுகாதார போசாக்கு நலனோம்புகை அமைச்சும் இணைந்து செயல்படுத்தி வரும் சுகாதார வளர்ச்சிப் பாடசாலைகள் வேலைத் திட்டத்தை சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலும் விரிபுபடுத்தத் திட்டமிடப்பட்டிருக்கின்றது.

இது குறித்து கல்வி அமைச்சின மேலதிக செயலாளர் எஸ்.எல்.குணவர்த்தன பாதிக்கப்பட்ட மாகாணங்களிலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார். சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு, தென் மாகாணங்களிலுள்ள வலயங்களைச் சேர்ந்த தரம் 07 தொடக்கம் 10 வரையிலான தரங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் இரும்புச் சத்து விற்றமின் வில்லைகள் வழங்கப்படும் இவ்விநியோகம் வாரத்தில் ஒரு முறை நடைபெறும் என அறிவிக்கப்படுகின்றது.

### புலமைப் பரிசில் நிதியுதவி

(றிஸ்வானுல் ஜன்னா)

இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி, இலங்கைப் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெற்றுள்ள வசதிகள் குறைந்த 8 முஸ்லிம் மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் நிதி உதவியை வழங்க முன்வந்துள்ளது.

2003ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்து மருத்துவம், பொறியியல், பல் மருத்துவம், விவசாயம், மிருக வைத்தியம் ஆகிய துறைகளில் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ள முஸ்லிம் மாணவர்கள் இந்நிதி உதவியைப் பெற விண்ணப்பிக்க முடியும். ஸ்ரீலங்கா இஸ்லாமிய நிலையத்தில் இதற்கான விண்ணப்பத்தைப் பெற்று எதிர்வரும் மார்ச் மாதம் 15ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி சவூதி அரேபியாவை தலைமையகமாகக் கொண்டு செயல்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### விபரம் திரட்டல்.

(துஷி)

அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் சரியான புள்ளி விபரங்களை கல்முனை மாவட்ட சர்வோதய அமைப்பினர் திரட்டிவருகின்றனர். சுனாமி அனர்த்தத்தின் போது உயிரிழந்தவர்கள், காணாமல் போனவர்கள், காயமடைந்தோர் போன்ற விபரங்களும், மற்றும் வீடு வாசல்களை இழந்தோர், பொருள்களை இழந்தோர், அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளோர், உறவினர் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளோர், இதுவரை நிவாரணங்கள் பெறாதோர், போன்ற சரியான புள்ளி விபரங்களைத் திரட்டும் நடவடிக்கையில் சர்வோதய அமைப்பைச் சேர்ந்த பணியாளர்கள் ஈடுபட்டு வருவதாகக் கல்முனை மாவட்ட சர்வோதய இணைப்பாளர் திருமதி நித்தியகைலேஸ்வரி தெரிவித்தார்.

### அப்புறப்படுத்தப்படவில்லை.

(நமது நிருபர்)

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்பட்ட நிவாரணப் பொருட்கள் அடங்கிய 275 கொள்கலன்கள் துறைமுகத்தில் அப்புறப்படுத்தப்படாமல் இருப்பதாக சமூக சேவைகள் அமைச்சு தெரிவிக்கின்றது. அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும், தனிப்பட்டவர்களின் முகவரிக்கும் இந்தக் கொள்கலன்கள் அனுப்பப்பட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. நிவாரணப் பொருட்களுக்காக வழங்கப்பட்டிருந்த வரிகள் நீக்கப்பட்டதை அடுத்தே இந்தக் கொள்கலன்கள் அகற்றப்படாமல் இருப்பதாகவும் அமைச்சர் சுமேதா பியசேன மேலும் தெரிவித்தார். கொள்கலன்களில் உள்ள பொருட்கள் பழுதடைவதைத் தடுக்கும் வகையில் பாதுகாப்புச் செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.



தேற்றாத்தீவு புனித யூதாதேயு தேவாலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம் பெற்ற அருட் திரு போல் ரொபின்சன் அவர்களின் "வல்லமை கீதங்கள" ஒலிப்பேழை வெளியீட்டு விழாவில் ஆராதனை நிகழ்த்துவோரையும், அதில் கலந்து கொண்டோரையும் படத்தில் காணலாம்.

(படமும் தகவலும்:- அ.நிசாந்)

## வாராந்த பொதுச் சந்தையை நடத்துமாறு பொது மக்கள் கோரிக்கை.

(நமது நிருபர்)

வவுணதீவுப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புதுமண்டபத்தடிக் கிராமத்தில் வாராந்த பொதுச் சந்தையொன்றினை நடாத்துமாறு பொது மக்கள் வவுணதீவு பிரதேச சபை செயலாளரை கோரியுள்ளனர்.

புதுமண்டபத்தடிப் பகுதியிலுள்ள அயல் கிராமங்களான நடராஜானந்தபுரம், காலையடிக்குளம், கொல்லன்சேனை, மூன்றாளமடு, பருத்திச்சேனை, காயான்மடு, கரையாக்கன்தீவு, மண்டபத்தடி, கொத்தியாபுலை, இலுப்படிச்சேனை, வாழைக்காலை, சின்னக்காலபோட்டமடு போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது அன்றாட தேவைக்காக மட்டக்களப்பு நகருக்கே செல்ல வேண்டியுள்ளது. இதனால பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். காலை 9.00 மணிக்கு மணற்பிட்டி முதலாவது பஸ் வண்டியில் சென்று பி.ப.4.00 மணிக்கு வீடு திரும்புகின்றனர்.

ஆனால் இக்கிராமங்கள் அனைத்திற்கும் மத்தியிலுள்ள புதுமண்டபத்தடிக் கிராமத்தில் அமைக்கப்பட்டிருக்கும் பொதுச் சந்தைக் கட்டடத்தில் வாரத்தில் ஒரு முறையாவது சந்தை நடவடிக்கைகளை ஆரம்பித்தால் இங்குள்ள மக்களுக்கு பெரும் நன்மையாக அமையும் அவர்கள் பஸ் ஏறி நீண்ட தூரம் பயணிக்க வேண்டியதில்லை. தமக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் தமது காலடியில் பெற்றுக் கொண்டதாக அமையும்.

எனவே வவுணதீவு பிரதேச செயலாளர் இதில் கூடிய கவனம் எடுத்து அங்கு அமைக்கப்பட்டிருக்கும் பொதுச் சந்தைக் கட்டடத்தில் வாரத்தில் ஒரு முறை சந்தை நடவடிக்கையினை ஆரம்பிக்குமாறு அக்கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செங்கலடி மத்திய கல்லூரியில் இருமாடிக் கட்டடத் திறப்பு விழா

(செங்கலடி நிருபர்)

செங்கலடி மத்திய கல்லூரியில் நிக்கோட் திட்டத்தின் மூலம் 50 லட்ச ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட 10 வகுப்பறைகளைக் கொண்ட, இரு மாடிகளைக் கொண்ட புதிய கட்டடத் திறப்பு விழா எதிர்வரும் 24ம் திகதி வியாழக்கிழமை காலை 8.42 மணியளவில் நிக்கோட் திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசனினால் திறநது வைக்கப்படும். கல்லூரியின் அதிபர் க. சிறிதரன் தலைமையில் நடைபெறும் இத் திறப்பு விழாவில் மட்டக்களப்பு மாவட்ட நிக்கோட் திட்டப் பணிப்பாளர் ஆர்.சிவானந்தராஜா, கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஜெயினுதீன், ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் எஸ்.கிரிதரன், ஏறாவூர் பற்று 2 பிரிவு கோட்டக் கல்வி அதிகாரி இ.வேலுப்பிள்ளை ஏறாவூர் பற்று பிரதேச சபையின் செயலாளர் திருமதி கே.ஜே. அருட்பிரகாசம் உட்பட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சிகரம் அகதிமுகாம் பள்ளிவாயல் புனரமைக்கும் பணி ஆரம்பம்.

(காத்தான்குடி நிருபர்)

மண்முனைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட சிகரம் அகதி முகாமில் அமைந்துள்ள பள்ளிவாயலை நிர்மாணிப்பதில் முன்னாள் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

சுனாமி அனர்த்த நடவடிக்கைகளை துரிதமாக பல்வேறு பணிகளிலும், மனிதாபிமான அடிப்படையிலும் செயற்பட்டு வரும் எம். அஸ்ஹர் தலைமையிலான இளைஞர் குழுவினர் குறித்த பள்ளிவாயலை திருத்தும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பள்ளிவாயலுக்குத் தேவையான சகல கட்டட உபகரணங்களும் ஹிஸ்புல்லாஹ் அவாகள் மூலம் பெற்று திருத்தப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். விரைவில் பள்ளிவாயல் வேலைகள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை காத்தான்குடி பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து கூடாரங்களையும் இரவு பகல் பாராது அமைத்துக் கொடுத்துள்ள குறித்த இளைஞர் குழுவினர் அகதிமுகாம்களில் காணப்படும் குறைகளையும் நேரடியாகச்சென்று பார்வையிட்டு தீர்த்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

## களுவன்கேணி வீதி இது வரை திருத்தப்படவில்லை.

(நமது நிருபர்)

களுவன்கேணிப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீதிகள் பல இதுவரை திருத்தப்படாததால் பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்

வந்தாறுமூலை பிரதான வீதிச் சந்தியிலிருந்து கிழக்குப் பகுதி நோக்கிச் செல்லும் களுவன்கேணிக் கிராமத்திற்கான பிரதான பாதை, களுவன்கேணி கடற்கரை மீன்பிடித்துறைமுக வீதியும் மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளன.

இதனால் பொதுமக்களின் அன்றாட இயல்பு நிலை வெகுவாகக் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து இவ்வீதிகளை திருத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

## பனிச்சங்கேணி, புதுமுகத்துவாரப் பாலங்களின் திருத்தப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.

(காத்தான்குடி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி கடற்கோளினால் பாதிப்புக்குள்ளான வாகரை பனிச்சங்கேணிப் பாலம் திருத்த வேலைகள் யாவும் முடிவுற்று தற்போது சகல வாகனங்களும் போக்குவரத்தினை தங்கு தடையின்றி மேற்கொண்டு வருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளர் மட்டக்களப்பு மாவட்ட பொறியியலாளர்களை உடனடியாக சுனாமியால் பாதிப்புற்ற பாலங்களை நிர்மாணிக்கு மாறும் இதற்குத் தேவையான நிதியினைப் பெற்றுத் தருவதாக கூறிய உறுதி மொழியினை அடுத்தே பனிச்சங்கேணி பால வேலைகளை தற்போது முழுமையாக நிறைவு பெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இதே வேளை மட்டக்களப்பு பார் வீதியில் சுனாமி கடற்கோளினால் சேதத்துக்குள்ளான 4ம் கிலோ மீற்றர், 5ம் கிலோ மீற்றர் பாலங்களும் முழுமையாக திருத்தப்பட்டுள்ளதுடன் போக்குவரத்திற்காக திறந்து விடப்பட்டு சகல கனரக வாகனங்கள் உட்பட அனைத்து வாகனங்களும் செல்வதாகவும் பொறியிலாளர் தெரிவித்தார்.

## சுனாமி நிவாரண முத்திரைகள் கிராமஉத்தியோகத்தர்கள் வழங்க வேண்டும்.

**-அரச அதிபருக்கு உத்தியோகத்தர் முறையீடு.-**

(நமது நிருபர்)

சுனாமி நிவாரண முத்திரை விநியோகம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு சில பிரதேச செயலகத்தில் அங்கு கடமை புரியும் இலிகிதர்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றது.

சுனாமி ஏற்பட்டதிலிருந்து பல கஸ்டங்களின் மத்தியில் பொது மக்களுக்கு இரவு பகலாக கடமையாற்றிய கிராம உத்தியோகத்தர்களின் கடமையை வேறு உத்தியோகத்தர்களுக்கு வழங்கியதை ஆட்சேபித்து மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருக்கு வடக்கு கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் முறையிட்டுள்ளது.

இச்செயலை உடனடியாக நிறுத்தும் படியும், சுனாமி முத்திரைக்கு கையொப்பமிடும் பிரிவு கிராம உத்தியோகத்தரிலேயே விநியோகம் செய்யப்படவேண்டுமென மட்டக்களப்பிற்கு வந்திருக்கும் வடகிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் தலைவர் ப.வசந்தகுமார் அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

## சிரமதானம்.

(அ.நிசாந்)

கடற்பேரலை அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களாக இயங்கி வந்த களுவாஞ்சிகுடி பிரதேச பாடசாலைகளில் தற்போது அரசசார்பற்ற நிறுவனங்களால் சிரமதானம் செய்யப்பட்டு வருகின்றது. நேற்று களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலய கட்டடங்களின் வெளிச்சுவர்கள் சாயம் பூசப்பட்டதுடன், செட்டிபாளையம், களுவாஞ்சிகுடி போன்ற பாடசாலைகளின் சூழல் சிரமதானம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இன்னும் பல நலன்புரி நிலையங்களாக இயங்கி வந்த கட்டடங்களும் சிரமதான நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## களுதாவளைப் பிரதேச விவசாயிகளுக்கு கடனுதவி.

(அ.நிசாந்)

களுதாவளை விவசாய உற்பத்திக் கிராம அலுவலகத்தில் விவசாயிகளுக்கான கடன் வழங்கல் சம்மந்தமான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் பி.ப. 4.00 மணிக்கு இடம் பெற்றது.

இக் கூட்டத்தின் போது விவசாயிகளுக்கான கடன் முறைகள் வழங்குவது தொடர்பாகவும், விவசாயத் துறை உபகரணங்களை வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. அத்துடன் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான பாதிப்புக்கள் பற்றியும் கேட்டறியப்பட்டுள்ளது இச் சந்திப்பின் போது யூ.என்.டி.பி. அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சம்மந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தங்களால் இயன்ற உதவிகளை வழங்கத் தயாராக உள்ளதாகவும் மேற்படி அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

## வல்லமை கீதங்கள் ஒலிப்பேழை வெளியீடு

(அ.நிசாந்)

அருட்தந்தை போல் ரொபின்சன் அவர்களின் "வல்லமை கீதங்கள்" ஒலிப்பேழை வெளியீட்டு விழா நேற்று முன்தினம் இரவு 6 மணி தொடக்கம் இரவு 12 மணி வரையும் தேற்றாத்தீவு புனித யூதா தேயு தேவாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் கூடியிருந்து விசேட பிரார்த்தனை நிகழ்வுகளில் கலந்து கொண்டதுடன் இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து கத்தோலிக்க மறை மாவட்ட ஆயர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். பல ஆயர்கள் வாழ்த்துச் செய்திகளைத் தொடர்ந்து வல்லமை கீதங்கள் ஒலிப்பேழை வெளியிட்டு வைக்கப்பட்டது.

## களுதாவளையை கட்டியெழுப்ப கலந்துரையாடல்.

(அ.நிசாந்)

சுனாமியின் தாக்கத்தால் அதிகளவு பாதிப்புக்களை பட்டிருப்புத் தொகுதியில் சந்தித்த கிராமங்களுள் களுதாவளைக் கிராமும் ஒன்று இதன் அபிவிருத்தி சம்மந்தமான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் களுதா வளை விபுலானந்தா கல்வி நிலையத்தில் இடம்பெற்றது.

## பிரான்ஸ் வைத்தியர்களால் பெரிய நீலாவணையில் வைத்திய சேவை

(நமது நிருபர்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பெரிய நீலாவணை கிராம மக்களுக்கு பிரான்ஸ் வைத்தியக் குழுவினர் வைத்திய சேவைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பெரிய நீலாவணை சமூக பொருளாதார அபிவிருத்தி அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் வைத்திய சேவையில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பல வைத்தியர்கள் சேவையினை மேற்கொண்டு வருகின்றனர் பெரிய நீலாவணை விஷ்ணுஆலய வளாகத்தில் வைத்து இச் சேவையினை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ் நிர்மானப் பணிகளின் ஆரம்பதிட்ட தயாரிப்பை ஆராய விசேட குழு அனுப்பப்படும்

## -நகர அபிவிருத்தி அமைச்சு முடிவு-

(நமது நிருபர்)

யாழ்ப்பாணத்தில் நிர்மானப் பணிகள் தொடர்பான ஆரம்பத்திட்டங்களை தயாரிப்பது குறித்து ஆராய்வதற்கு விசேட அதிகாரிகள் குழு ஒன்றை அனுப்ப நகர அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. குறிப்பிட்ட அதிகாரிகளின் குழு எதிர்வரும் ஒரு வார காலப்பகுதிக்குள் யாழ் விஜயத்தை மேற்கொள்வார்கள் என அமைச்சின் செயலாளர் தெரிவித்திருக்கின்றார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அமைச்சின் செயலாளர் சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த ஏனைய பிரதேசங்களை மீள நிர்மானிப்பது தொடர்பான அடிப்படைத் திட்டங்களை தயாரிக்கும் பணிகளில் 80 வீதமானவை பூர்த்தியடைந்திருப்பதாகவும் அவர் கூறினார். இந்த நிர்மானப்பணிகள் குறித்து ஜனாதிபதியுடனும் நேற்று முன்தினம் விசேட பேச்சுவார்த்தை நடத்தியதாக அவர் தெரிவித்தார்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நிர்மானப் பணிகளுக்காக காணிகளை தெரிவு செய்வது குறித்து அடுத்த வாரம் விசேட பேச்சுவார்த்தையை நடத்தவும் நகர அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

# நோர்வே சமாதான தூதுவர் சொல்ஹெய்ம் இன்று இலங்கை வருகை

(நமது நிருபர்)

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சின் விசேட ஆலோசகரான எரிக்சொல்ஹெய்ம் இன்று இலங்கை வரவுள்ளார்.

இம்மாதம் 28ம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் அவர் ஜனாதிபதி, தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்த இருக்கின்றார்.

இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையின் மூன்றாம் ஆண்டு நிறைவையொட்டி 22ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கின்ற விசேட வைபவம் ஒன்றிலும் அவர் கலந்து கொள்ள இருக்கின்றார். அத்துடன் சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்ட அம்பாறை, யாழ்ப்பாணம், காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கும் விஜயம் செய்யும் எரிக்சொல்ஹய்ம் கண்டி நகருக்கும் விஜயம் செய்வார் என்று நோர்வே தூதரகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிய வந்துள்ளது.

# கரையோர புகையிரத பரீட்சார்த்த சேவை நேற்று ஆரம்பம்

(நமது நிருபர்)

கரையோரப் புகையிரதப் பாதையில் புகை வண்டிச் சேவை நடவடிக்கையை வழமைக்கு கொண்டுவரும் முகமாக நேற்று பரீச்சார்த்த சேவை ஒன்று இடம் பெற்றது.

போக்குவரத்து அமைச்சரின் தலைமையில் இந்த பரீட்சாத்த புகையிரதச் சேவை அம்பலாங்கொடையில் இருந்து மாத்தறை வரை இடம் பெறவிருக்கிறது. நேற்றுப் பிற்பகல் 2 மணியளவிலேயே இப்பரீட்சார்த்தி புகையிரத சேவை இடம் பெற்றதாக புகையிரத சேவைகள் அத்தியட்சகர் தெரிவிக்கின்றார்.

கடந்த டிசம்பர் மாதம் 26ம் திகதி ஏற்பட்ட சுனாமிப் பேரலைத் தாக்கத்தினால் கரையோரப் புகையிரதப் பாதைகள் பெருமளவு சேதமடைந்தன. இப்பாதைகளை புனரமைப்பதற்கு கிட்டத்தட்ட 450 மில்லியன் ரூபா செலவாகியதாகவும் புகையிரத சேவைகள் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

இன்று முதல் கொழும்பிலிருந்து மாத்தறை வரையான புகையிரத சேவைக் கால அட்டவணைக்கு ஏற்ப இடம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.புகையிரத சமிக்கை கட்டமைப்புக்களின் புனர்நிர்மானப் பணிகள் தற்கோது இடம் பெற்று வருவதினால் புகையிரதப் போக்குவரத்தில் தாமதங்கள் ஏற்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் நெருக்கடி முற்றி விட்டது

## கிராமிய பிரதி அமைச்சர்

(நமது நிருபர்)

கூட்டமைப்பு என்ற அடிப்படையில் பெது மக்களின் அதிகாரத்தை பெறுவதற்காக முன் வைத்த செயற்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஒவ்வொரு கட்சிகளினதும் கருத்துக்களையும் அனுபவங்களையும் பெறும் போதும் நெருக்கடிகள் தோன்றுவதாக சிறிய, மற்றும் கிராமிய பிரதி அமைச்சர் சுனில் ஹத்திரெத்தினம் தெரிவித்திருக்கின்றார்.

கூட்டமைப்பை சேர்ந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே நெருக்கடிகள் இருபபதாகவும் அவர் கூறுகின்றார். ஹெஸ்வேவத் தொகு தியில் மறுசீரமைப்பு தொடர்பாக நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பிரதி அமைச்சர். சுனில் ஹரந்திரெத்தினம் இக்கருத்துக்களைக் கூறினார். எவ்வித நெருக்கடிகள் இருந்த போதிலும் கூட்டமைப்பு அரசாங்கம் ஒரு போதும் வீழ்ச்சி அடையாது என்னும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்னரும் இந்த கூட்டமைப்பு வீழ்ச்சியடையும் என்று சிலர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட சுனில் ஹந்திரெத்தி இது வரை எந்தவொரு கூட்டமைப்புகளுக்குள்ளும் இல்லாத நெருக்கடி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்குள் நிலவுவதாகவும் கிராமியப் பிரதி அமைச்சர் குறிப்பிடுகின்றார்.

# சுனாமியால் சேதமடைந்த பகுதிகளை பார்வையிட அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள் வருகை

(நமது நிருபர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதற்காக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜோர்ஜ் புஷ்,(சீனியர்) பில்கிளின்டன் ஆகியோர் நேற்று மாலை 4.00 மணியளவில் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இவ்விரு முன்னாள் ஜனாதிபதிகளும் நேற்றிரவு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைச் சந்தித்ததுடன், அதன் பின்னர் பிரதமர் எதிர்கட்சி தலைவர் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் இன்று காலை மாத்தறை செல்லும் முன்னாள் ஜனாதிபதிகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும், பார்வையிட்டதுடன மலைதீவுக்கும் செல்கின்றனர்.

தமது விஜயத்தின் போது சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளின் சேத விபரங்கள் மற்றும் அமெரிக்கா அந்த நாடுகளுக்கு எவ்வாறான உதவிகளை வழங்க முடியும் என்பது குறித்தும் இந்த இரு தலைவர்களும் ஆராய்ந்து சிபாரிசு செய்ய இருக்கின்றார்கள்.

# விமான நிலையத்துக்குள் ஒலிப்பட கையடக்க தொலைபேசிகள் கண்டுபிடிப்பு

(நமது நிருபர்)

சட்டவிரோதமாக இலங்கைக்கு எடுத்துவர முயற்சிக்கப்பட்ட செய்மதி தொழில் நுட்பத்துடன் கூடிய ஒலிப்படக் கையடக்கத் தொலைபேசிகள் சில கட்டுநாயக்க விமானத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சிலர் இவற்றினை எடுத்துவந்துள்ளார்கள். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோஜ் புஷ், (சீனியர்) பில் கிளின்டன் ஆகியோரது இலங்கைப் பயணம் தொடர்பான செய்திகளை வெளியிட இவற்றை எடுத்து வந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இது தொடர்பாக சுங்கத்திணைக்களத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்: இந்த வகையான தொலைபேசிகளை அனுமதியின்றி இலங்கைக்குள் எடுத்துவர முடியாது என தெரிவித்துள்ளார்.

# நீதிமன்ற அனுமதியுடன் தத்தெடுக்கப்படும் சிறுவர்களுக்கு ரூபா 500 வழங்கத் தீர்மானம்

(றில்விறுஸ் ஜீன்னாா)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சுனாமி பேரலை காரணமா பெற்றோர்களை இழந்து அனாதையான குழந்தைகளை நீதிமன்றங்களின் அனுமதிக்கமைய தத்தெடுத்து பராமரிக்கும் நபர்களுக்கு குழந்தை பராமரிப்புக்காக மாதம் ஒன்றுக்கு 500ரூபா விசேடஅலவன்ஸ் ஒன்றை வழங்குவதற்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

இதற்கான அனுமதியை மாகாண ஆளுனர் டிரோன் பெர்னாண்டோ வழங்கியிருந்ததாக மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த 500ரூபா விசேட அலவன்ஸ் ஆறு மாத காலத்திற்கு வழங்கப்படும் எனவும் இந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இது தவிர யுனிசெப் நிறுவனம் அனாதைக் குழந்தைகளை பராமரிப்பவர்களுக்கு 500ரூபா பெறுமதியான அத்தியவசியப் பொருட்கள் அடங்கிய பொட்டலங்களை வழங்க முன்வந்திருப்பதுடன் பெற்றோர்களை இழந்த இக் குழந்தைகளின் கல்வி, தொழில் முயற்சி என்பன தொடர்பான செயற் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தவும் திட்டமிட்டிருக்கிறது எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இம் மாகாணத்தில் 737 குழந்தைகள் சுனாமிப் பேரலை காரணமாக தாய், தந்தை இருவரையும் இழந்து அனாதைகளாயிருப்பதுடன் 2125 குழந்தைகள் தாய் அல்லது தந்தை இருவரில் ஒருவரை இழந்திருப்பதாக கணக்கிடப்பட்டிருக்கிறது.

## 17 சிப்பாய்கள் திடீர் சுகவீனம்

(நமது நிருபர்)

வவுனியா கொக்கலியாவில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சி பெறும் சிப்பாய்கள் திடீரென நேற்று முன்தினம் நோய்வாய்பட்டதையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் c4 ரக வெடிமருந்துகளைப் பயன்படுத்தியிருந்தவர்கள் எனவும் இதனைப்பயன்படுத்தியமையினாலேயே இந்நோய் ஏற்பட்டிருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு நோய் வாய்ப்பட்ட சிப்பாய்களின் நிலை பாரதூரமாக இருந்ததனால் வானூர்தி மூலம் அனுராதபுர வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

# வட கிழக்கில் சிறுவர் இல்லங்கள் அமைப்பதானால் நன்நடத்தை அதிகாரியின் அனுமதி பெறவேண்டும்

## -மாகாண சமூக சேவை திணைக்களம் முடிவு-

(நமது நிருபர்)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சுனாமிப் பேரலையின் பின்னர் புதிதாக சிறுவர் இல்லங்கள் அமைக்கப்படுவதில்லையெனவும் சிறுவர் நன்நடத்தை அதிகாரி அல்லது சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆகியோரின் சிபார்சின்றி சிறுவர் இல்லங்களில் சிறுவர்களை அனுமதிப்பதில்லை எனவும் மாகாண சமூக சேவைகள் திணைக்களம் முடிவு செய்திருக்கின்றது. தற்போது பதிவு செய்யப்படாதிருக்கும் சிறுவர் இல்லங்கள் யாவும் சிறுவர் நன்நடைத்தை திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டுமென திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறு பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களை மூடி விடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. தற்பொழுது செயற்பட்டுக் கொண்டிருக்கும் சிறுவர் இல்லங்களுக்கு உதவி செய்ய விரும்பும் தொண்டர் நிறுவனங்களும், அமைப்புக்களும், தனிநபர்களும் குறிப்பிட்ட சிறுவர் இல்லம் பதிவு செய்யப்பட்டதா என்பதை உறுதி செய்து கொள்ளல் வேண்டுமென திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிறுவர் இல்லங்கள் மீது தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொள்ளவும் சிறார்களை தத்தெடுக்கும் விடயம் நாட்டில் சட்டங்களுக்கு உட்பட்டமுறையில் நடைபெறுகின்றதா என்பதையும் மாகாண சமூக சேவைகள் திணைக்களம் அவதானிக்குமென திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# சகல வலயக்கல்வி அலுவலகங்களினதும் செயற்பாட்டை மீளமைக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை

(றிஸ்வானுல் ஜீன்னா)

நாட்டிலுள்ள வலயக் கல்வி அலுவலகச் செயற்பாடுகளை மீளமைக்குமாறும் வினைத்திறன் குறைந்த அதிகாரிகளை அப்பதவியிலிருந்து நீக்கி பொருத்தமான அதிகாரிகளை அந்த இடங்களுக்கு நியமிக்குமாறும் சகல மாகாண ஆளுணர்களையும், முதலமைச்சர்களையும் கல்வி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

வலயக் கல்வி அலுவலகங்கள் மூலம் ஆசிரியர்களுக்கும் பேற்றோர்களுக்கும் திருப்தி கரமான சேவைகள் கிடைக்கப் பெறாமை குறித்து கல்வி அமைச்சுக்கு பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகள் கிடைத்து வருவதையிட்டு இந்த உத்தரவை ஜனாதிபதி விடுத்துள்ளார்.

வலயக் கல்வி அலுவலகங்களில் கல்விப்பணிப்பாளர்கள் கடமையில் இல்லாமை, ஆசிரியர்களின் தனிப்பட்ட சேவைகளை முறையாகப் பேனப் படாமை குறித்து இப்பணிப்புரையை ஜனாதிபதி விடுத்தார்.

# வவுனியா பொது வைத்தியசாலையில் இராணுவ அதிகாரி நடந்த விதம் கண்டிக்கத்தக்கது


(நமது நிருபர்)

வவுனியா சிறிலங்கா இராணுவ சிப்பாய்களுக்கு ஏற்பட்ட நிலைமைகள் தொடர்பாக வவுனியாப் பொது வைத்தியசாலைக்கு சென்ற பத்திரிகை யாளரை செய்தி சேகரிக்க விடாது சிறிலங்கா இராணுவ அதிகாரி தடுத்துக் கொண்டமை வன்மையான கண்டனத்திற்குரியது என்றும் இது தொடர்பாக உடனடியாக ஆராயுமாறும் வன்னிப் பத்திரிகையாளர் சங்கம் இராணுவத்தளபதி சாந்த கொட்டேகொடவுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது. அக்கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, நீண்டகாலமாகவே இராணுவத்தினருடன் வன்னிப் பத்திரிகையாளர்கள் புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகிறார்கள் அந்த வகையில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இந்த நிலை தொடர்பாக செய்தி சேகரிப்பதற்கு நேற்று முன்தினம் இரவு 11.00 மணியளவில் வவுனியா பொது மருத்து மனைக்குச் சென்ற பத்திரிகையாளருக்கு கண்டித்தமை குறிப்பிடத்தக்கது.

# பூவையர் தடாகம்

மங்களேஸ்வரி

## பிள்ளையின் வளர்ப்பில் தந்தையின் பங்கு



நிலாக்காட்டி சோறூட்டுவது தொடக்கம் ஆராரோ பாடுவது வரை குழந்தைகளின் அனைத்துப் பொறுப்பையும் தாய்தான் ஏற்கின்றாள் ஏன்? அப்பாக்களுக்கு அதில் பங்கில்லையா? ஆனால் நாம் அப்படி எடுத்துக் கொள்ள முடியாது. ''தாயின்அன்புத் தாலாட்டும் தந்தையின் அறிவு ஆரமும்" ஒரு குழந்தைக்கு மிகவும் அவசியம்.

எனவே ஒரு குழந்தையின் வளர்ப்புக்குத் தாய் மாத்திரம் காரணம் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே பெண்களே இதில் உங்கள் கணவரையும் ஈடுபடுத்துங்கள். நீங்கள் குழந்தை பிறந்த ஆரம்ப காலத்திலிருந்தே அவரை ஈடுபடுத்தலாம்.

எவ்வாறான வகைகளில் அவரை ஈடுபடுத்தலாம். என்று யோசிக்கின்றீர்களா? அவர் எனக்கு குழந்தையைத் தூக்கக் கூடத் தெரியாது என அவர் தப்பிக்கின்றாரா? விடாதீர்கள், ஏன் நீங்கள் மட்டும் என்ன பிறக்கும் போதே அதைக் கற்றுக் கொண்டவரா? எனவே குழந்தையை எப்படிப் பிடிப்பது எப்படித் தூக்குவது என்பதை அவருக்கு காட்டுங்கள். தந்தைமார்களை பொறுத்தவரையில் குழந்தைகளின் விடயத்தில் தாய்ப்பால் கொடுப்பதைத் தவிர அனைத்து வேலைகளையும் அவர்கள் செய்யலாம்.

ஏன் குழந்தைகளுக்கு பாட்டிலில் பால் கொடுத்துப் பழக்கலாம். அத்தோடு குழந்தைகளைச் சுத்தம் செய்தல் போன்ற வேலைகளைக்கூடப் பழக்கலாம். அத்தோடு, குழந்தைகளின் வேலைகளை அப்பா, அம்மா இருவரும் சேர்ந்து கவனிக்கலாம். உதாரணமாக குழந்தைகளுக்குச் சாப்பாடு தயாரிப்பது அவர்களைக் குளிப்பாட்டுவது போன்ற வேலைகளில் இருவரும் பங்கு கொள்ளலாம். பொதுவாக ஒரு வீட்டில் இருவரும் வேலைக்குப் போகின்றவராக இருந்தால் தந்தையின் உதவி கட்டாயம் அவசியம். இந்தத் தந்தைகளின் உதவி குழந்தைகளின் வளர்ப்பில் அவசியம் தேவையானதாகக் காணப்பட வேண்டும்.

ஒரு குழந்தைக்கு முதல் காலத்திலேயே பெற்றோரின் அருகாமை முக்கியம். எனவே பெற்றோரே குழந்தைகளின் வேலைகளை அம்மாதான் செய்யவேண்டும். அப்பாதான் செய்ய வேண்டும் என பிரித்து வைக்க வேண்டாம். அத்தோடு பெண்களே உங்களது கணவர் ஓய்வு நேரங்களில் அரட்டையடிக்க வெளியே செல்லும் போது குழந்தைகளை அவருடன் அனுப்பி வையுங்கள்.

தந்தையைக் கண்டு பயமடையும் சுபாவத்தை குழந்தையின் மனதில் ஏற்படுத்தாதீர்கள். இதன் மூலம் தந்தைக்கும் பிள்ளைக்கும் இடையிலான உறவு மிகத் தெலைவிலே சென்றுவிடும்.

எனவே பெற்றோர்களாகிய எமக்கு எமது குழந்தைகளின் அக்கரை குறித்து கவனம் இல்லாமல் இல்லை. ஆனால் இப்போது எல்லோரும் சேர்ந்து பெண்கள் மீதுதான் பழியைப் போடுவார்கள். ஒரு தாய்தான் எதிர்காலத்தில் நல்ல குழந்தைகளை உருவாக்க முடியும் என்பது மேலோட்டமாகப் பார்க்கும் போது சரிதான் என்பது போல் இருக்கும். அப்படியானால் குழந்தைகளை ஆளாக்குவது முழுதும் பெண்களின் வேலைதான். ஆண்களுக்கு அதில் பங்கில்லை. அவர்கள் எப்படி வேண்டு மானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்று கொள்ளலாமா? எனவே ஆண்களும் அவர்களுக்கு நல்ல முன்மாதிரியாக இருந்து காட்ட வேண்டும். ''பாலூட்டும் அன்னை அவள் நடமாடும் தெய்வம்" ''அறிவூட்டும் தந்தை நல்வழிகாட்டும் தலைவன்" என்ற வரிகளுக்கு அமைய இருவரும் குழந்தையின் நலனில் பங்குகொள்ள வேண்டும்.

**பெண்களே!**

## சளித் தொல்லையா இதனைக் கவனியுங்கள்



பெண்களே சில வேளைகளில் உங்களுக்கு சூழ்நிலை காரணமாக சளித் தொல்லையால் அவதியுறும் நிலை தோன்றும் இந்த வியாதி அனைவரையும் பீடிக்கும் வியாதியாகும். எனவே நீங்கள் கீழ்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு செயற்பட்டால் இந்த நோயிலிருந்து நீங்கலாம்.

நீங்கள் உண்ணும் உணவு வகைகள் அவற்றுக்குக் காரணமா? என அறிந்து தவறான உணவு வகைகளைத் தவிர்த்தல் வேண்டும். அந்தவகையில் பால், பால் பொருட்கள், குளிர்பானங்கள், குளிச்சியான சூழ்நிலை போன்றவை சளியை அதிகரிக்கக் கூடியவை. இவற்றை முற்றிலும் தவிர்க்க வேண்டும். மேலும் விரைவில் நொதித்துப் போகக் கூடிய உணவுவகைகளை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர வேண்டும்.

மேலும் ஒவ்வாமைக்கு ஆளானவர்கள் நகரங்களில் பிரயாணம் மேற்கொள்ளுதல் வண்டி என்பனவற்றை ஓட்டிச் செல்லுதல், தூசு துரும்பு நிறைந்த வேளைகளிலும், வேலைகள் செய்யும் போதும் முகமூடியை அணிந்து கொள்ள வேண்டும்.

இந்தச் சளித் தொல்லை வராமல் தடுக்க தேன், நீர், எலுமிச்சம்பழச்சாறு ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து சில நாட்கள் இதை மட்டுமே அருந்தி, பின்ன் உணவுகளின் மூலம் அழுக்குகளைப் போக்கக் கூடிய உணவுகளை உண்டு வருவதன் மூலம் உறுதியான பலனளிக்க வாய்ப்பேற்படும்.

அத்தோடு நீங்கள் மழை வெயில் போன்ற காலங்களில் வெது வெதுப்பளிக்கும் உடைகளை அணிய வேண்டும். குளிரில் அதிகளவிலான நேரம் செலவளிக்கக் கூடாது. வெது வெதுப்பான நீரைப் பயன்படுத்த வேண்டும். அத்தோடு வெதுவெதுப்பான உணவு வகைகளையும் உட்கொள்ளல் வேண்டும்.

இப்படி அவதிப்படுகின்றவர்கள் துளசி, இஞ்சி, போன்ற மூலிகைச்சாறுகள் அல்லது எலுமிச்சம் பழம், மணப்புல், போன்றவற்றில் சஜாயம் காச்சிப் பயன்படுத்தினால் அவை பயனுள்ளதாக இருக்கும். அத்தோடு வேறு பிடித்தல் (ஆவிபிடித்தல்) சூடான ஒத்தடங்கள், வென்னீர் பாதக் குளியல் போன்றவையும் கட்டியாகவுள்ள சளியை கரைத்து அகற்றி விடும் தன்மை ஏற்பட்டு குணமடையவும் வாய்ப்பேற்படும்.

## பெண்ணே வல்லமைகளுக்கு வழி விடு

யாகச் செந் தணலில்
ஆவியாகி அவிந்தும்
சமையற் புகையினுள்
சங்கமித்து காயமிளந்து
குலமுனக்குத் தந்த
சன்மானம்தான் என்ன?


அறுசுவை ஆக்கிப் போட்ட உன்னை
அன்புடன் அணுகிய அணங்கு தன்னை
அடக்கி ஆண்டனர் உனது
உரிமைகள் அனைத்தையும்
தடுத்து வைத்தனர்.

காலங்கள் தோறும் ஆர்த்தெழும் உன்
ஆசைக்கனவுகள்
முடைக்கிப் போட்டன.
ஆனாலும் என்ன......?

கட்டுகள் உடைந்து
முடிவுகள் நாடி
வெளியாகி வந்தாய்
கல்விகள் கற்று
கலைகள் பயின்று
மலைகள் பலவற்றை
மகிழ்வுடன் கடந்தாய்!

பீடமாய் கிடந்த நீ
கணைகள் தொடுத்து நிமிர்ந்தாய்
பெண்மைக்குள்ளே உறங்கிய
சத்தியத்தினை
ஆவியாக்கிக் கொண்டாய்
புவனம் ஆவலிக்கின்றது உன்
பூமியும் வழிசமைக்கின்றது
உன் வல்லமைக்கு வழிவிடுவதற்காக!

## நோய் எதிர்ப்புச் சக்தியை வலுப்படுத்தும் தெய்வீக மூலிகைகள்



நம்மில் சிலர் நோய்வரும் முன்னர் உடலைச் சரியான அளவு கவனிக்காமல் நோய் வந்து விட்ட பிறகே மருத்துவரை நாடி கூடுதலான பணத்தினை செலவு செய்யும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அவ்வாறு இல்லாமல் உடலைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த நோய் எதிர்ப்புச் சக்தி மனித உடலில் தனி உறுப்பு ஒன்றினால் மட்டும் தோன்றுவதில்லை. குறிப்பாக மனித உடலில் அனைத்தும் சேர்ந்து செயற்பட்டே நோய் எதிர்ப்புச் சக்தியை உருவாக்குகின்றது.

இவ்வாறான நோய் எதிர்ப்புச் சக்தி நமது உடலில் இருக்க வேண்டுமானால் அதற்கு நாம் கொள்ளும் உணவுகளும், நம் அருகிலுள்ள தெய்வீக மூலிகைகளும், நம்முடைய பழக்க வழக்கங்களுமே ஆகும். இந்த முறையை தினசரி பயன்படுத்தினால் நாம் ஆரோக்கியமாக வாழலாம்.

எனவே நாம் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்ற நோக்கிலேயே நமது முன்னோர் வழிகாட்டிச் சென்றுள்ளார்கள் இதற்காகவே தல வழிபாடு என்ற ஒன்றை நிலைநாட்டி அங்கு மூலிகைகளைப் பிரசாரமாக வழங்குகின்றனர். அவ்வாறு பிரசாரமாக வழங்கப்படும் போது அவை தெய்வீக மூலிகைகளாகின்றன.

இந்த வகையில் தெய்வீக மூலிகைகளான, வேப்பிலை, வில்வம், துளசி, அறுகம்புல், அகத்தி இலை, மாவிலை,அரசிலை ஆலிலை, கரிசலாங்கண்ணீ, தும்பை, குப்பைமேனி, கீழ்காய்நெல்லி, ஜாதிக்காய், அதிமதிரம் என்பவைகள் அடங்கும்.

இவற்றில் ஏதாவது ஆறு வகையான மூலிகைகளை எடுத்து வந்து உலத்தி பொடி செய்து சமஅளவில் கலந்து ஒரு போத்தலில் போட்டு வைத்துக் கொள்ளுங்கள். அவற்றில் இரண்டு கரண்டி தூளினை எடுத்து தண்ணீரில் கலந்து உணவுக்கு முன்னர் தினமும் காலை வேளை உட்கொள்ளுங்கள்.

இதன் போது இந்த மூலிகைகளில் விற்றமீன் ஏ மற்றும் சி என்பன உள்ளன. தவிர ஆள், டி கேன்சர் ஆண்டி பக்டியெல் மற்றும் ஆள்டி அக்ளிடான்ட், ஆண்டி வைரஸ், பங்கஸ், போன்றவை களாக இவைகள் மேற்படுவதனால் இந்த மூலிகைக ளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைத் தூண்டும். ஆற்றல் உள்ளது. எனவே நீங்கள் இயற்கையிலேயே கிடைக்கும் இந்த தெய்வீக மூலிகைகளைக் கொண்டு ஆரோக்கியமான நோய் எதிர்ப்பு சக்தி உடையவராக மாறுங்கள்.

## மரக்கறிகளுள் ஒன்றான கோவாவும் அதன் பயன்களும்


இன்று மக்கள் மத்தியில் அதிகளவிலாக உண்ணப்படும் சோளம், உருளைக்கிழங்கு ஆகியவற்றுக்கு அடுத்தபடியாக இருப்பது கோவா எனலாம். இக் கோவா 2500ம் ஆண்டுக்கு முன்னமே இடம் பிடித்து விட்டது. இது குளிர்ப்பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படுவதுடன் மக்களின் பிரதான உணவு வகையாகவும் உள்ளது.

இதன் பயன்பாடுகளில் முத லில் கோவா மிகவும் மலிவான வி லையில் அனைவராலும் விரும்பி வாங்கப்படும் மரக்கறியாகும். இதனைப் பயிரிடுவதும் மிகவும் சுலபம் நாட்கள் சென்றாலும் கோவா கெட்டுப் போவதி ல்லை. சத்துக்கள் நிறைந்த இந்தக் கோவா நூற்றுக் கணக்கான வகைகளில் உள்ளது. பச்சை, ஊதா, சிவப்பு, போன்ற நிறங்களி லும் கிடைக் கின்றது. எனவே பெண்களே நீங்கள் கோவா வாங்கும் போது இவ்விடயங்களைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இலைகள் அடத்தியாகவும், கோவா கனமாகவும் இருக்க வேண்டும். வெளித்தோல்கள் பிரியாமல் இருக்க வேண்டும். ஏனெனில் காலம் தாழ்த்தினால்தான் அப்படியாகும். எப்போதும் வெட்டிய கோவாக்களை வாங்க வேண்டாம். ஏனெனில் அதிலிருந்து விற்றமீன் சிவகை அழிந்திருக்கும். எனவே வழமையாக வாங்கியே சமைக்கவும்,கோவா சமைத்த பின்னர் மீதாயாக உள்ள பகுதியில் எலுமிச்சம் பழச்சாற்றைத் தடவிவையுங்கள் பழுதடையாது.




# தென்னைச் செய்கையின் போது ஊடுபயிரின் முக்கியத்துவம்

தென்னைச் செய்கை பண்ணும் போது அதனை தனியாக செய்கை பண்ணுவதிலும் பார்க்க அவற்றிற்கிடையில் உள்ள இடை வெளிகளில் ஊடுபயிர்களை நடுவது சிறந்த முறையாகும். இதன்போது தென்னையில் இருந்து பயன் பெறுவதற்கு முன்னர் ஊடுபயிரிலிருந்து இலாபமும் பயனும் பெறலாம். அடுத்து இந்த ஊடுபயிரைச் செய்கை பண்ணுவதன் மூலம் அவற்றிலிருந்து உதிரும் இலைகுழைகள் மண் வளத்தை விருத்தி செய்யும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தென்னைச் செய்கையில் ஆர்வமுள்ள விவசாயிகள் தென்னைக் காணிகளினுள் ஊடுபயிரை வளர்த்து அதிலிருந்து வருமானத்தைப் பெறலாம்.



நாம் தென்னைக்காணியில் ஊடுபயிரைசெய்கை பண்ணுவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி நோக்குவோமாக:-

1.தென்னங்காணியின் ஒரு அலகின் உற்பத்தித் திறன் பன்மடங்காக அதிகரிக்கப்படும்.

2.ஊடுபயிருக்கு பிரயோகிக்கும் பசளை மீதிகள், பாசனநீர், மற்றும் பயிரியல் நடவடிக்கைகள், மூலம் மறைமுகமாகத் தென்னைப் பயிரின் வருடாந்த விளைச்சலை அதிகரிக்கும்.

3. தென்னை பயன் தர ஆரம்பிக்க முன்னர் பயிர்ச் செய்கையாளருக்கு வருமானம் கிடைக்க வழிவகுக்கும்.

4. காலநிலை மாற்றத்தினால் விளைச்சல் கூடிக் குறையும் காலத்தில் தோட்ட வருமானத்தை குறை நிரப்புவதற்கு வழிவகுக்கும்.

5. மண்ணீரம் பாதுகாக்கப்படுதலால் வரட்சியால் விளைச்சல் பாதிக்கப்படுதல் மிகக் குறையும்.

6. வளமான மண் இழப்பு கணிசமாக க் கட்டுப்படுத்தப்படுகின்றது.

7. ஊடுபயிரிலிருந்து உதிரும் இலைகள், தாவரக் கழிவுப்பகுதிகள் அடிக்கட்டைகள், மண்ணில் சேர்ந்து சேதனைப் பசளையாவதால் மேல் மண்ணின் பௌதிகத் தன்மை மேம்படுத்தப்படுகின்றது, வளம் அதிகரிக்கின்றது.

8. ஊடுபயிரிட்டாலும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளாலும் மண் தாவரப் போசணி மற்றும் மண்ணீரம் என்பவற்றிற்குபோட்டியாகவிருக்கும் களை, பூச்சி, புழுக்களும் கட்டுப் படுத்தப்பட்டு வயல் சுகாதாரம் பேணப்படும்.

9. ஊடுபயிர் வளர்ந்து மண் மேற் பரப்பை மூடும் போது மண்ணில் வெப்பநிலை வரண்ட காலங்களில் உயர்வடைதல் மட்டுப்படுத்தப்படுவதால் மேல் மண்ணிலுள்ள அகத்துறிஞ்சும் தென்னை வேர்கள் பாதிக்கப்படுதல் மட்டுப்படுத்தப்படும்.

10. தென்னை புதிதாக நடும் போது ஊடுபயிர்ச்செய்கையையும் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் தென்னங் கன்றுகளின் இறப்பு விகிதம் மிகவும் குறைவாகும்.இதனால் ஒரே சீரான தான தென்னந் தோட்டமொன்றை ஸ்தம்பிதம் செய்யக் கூடியதாக இருக்கின்றது.


11. பயன்படுத்தாது விடப்படும் வளமான நிலம் பயன்பாட்டுக்குட்படுத்தப்படும்.

12. ஊடுபயிரிடல் தொழிலாளர்களுக்கு அதிக தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும்.

**தென்னங்காணிகளுள் ஊடுபயிர்களை செய்கைபண்ணுவதன் நோக்கம்:-**

1.தென்னை மரம் அது இடங்கொள்ளும் இடப்பரப்பில் 25 வீதமான நிலத்தையே வேர்த் தொகுதியினால் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, மிகுதியாகவுள்ள75வீதம் நிலம் ஊடுபயிரிடலுக்கு உட்படுத்தக்கூடியதாக இருக்கின்றது.

2. நன்கு வளர்ந்த தென்னந் தோட்டமொன்றில் விழும் சூரிய வெளிச்சத்தில் 45வீதமான வெளிச்சம் மட்டுமே தென்னை ஓலைகளால் பயன் பாட்டுக்கு உட்படுத்தப்படுகின்றது. மிகுதி55வீதமும்முறையான ஊடு




பயிரிடல் மூலம் பயன்படுத்தக் கூடியதாகவுள்ளது.

3.தென்னை பயிரின் வளர்ச்சிக் கட்டத்தில் 01 தொடக்கம் 05 வயது வரை(முதலாம் வளர்ச்சிக் கட்டம்) அதிக வெளிச்சம் விரும்பும் ஓராண்டு பயிர்களும் பகுதிப் பல்லாண்டுப் பயிர்களும் செய்கை பண்ணப்படலாம். இக்கட்டத்தில் தென்னந் தோட்டங்களில் ஊடுபயிரிடலுக்கான நிலப்பரப்பு அதிகமான விகிதாசாரத்தில் கிடைக்கும்

4.தென்னைப் பயிரின் 05 தொடக்கம் 25 வயது வளர்ச்சிக் கட்டத்தில் (2ம் வளர்ச்சிக் கட்டம்) மிகவும் குறைவான ஒளி விரும்பும் குறுகிய கால,அல்லது குட்டையான வளர்ச்சியுடைய ஓராண்டுப் பயிர்கள் மட்டுமே செய்கை பண்ணக் கூடியதாக உள்ளது.

5. தென்னைப்பயிரின் 25 தொடக்கம் 60 வயது வரையான வளர்ச்சிக் கட்டத்தில் (3ம் வளர்ச்சிக் கட்டம்) ஓரளவு நிழல் விரும்பும், அல்லது நிழலை சகித்து வளரும் குறுகிய கால மற்றும் பல்லாண்டுப் பயிர்களும் செய்கை பண்ணப்படலாம்.

6. சில பயிர்கள் நிழல் விரும்பும் இயல்புடையன மேலும் சில பயிர்களுக்கு காற்றுத் தடைஏற்படுத்திக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இத்தகைய பயிர்கள் தென்னந் தோட்டத்துள் வளர்ப்பதற்குப் பொருத்தமானதாய் இருக்கின்றது.

**ஊடுபயிர்ச் செய்கை மேற் கொள்ளும் போது கவனிக்க வேண்டியவை:-**

1. ஊடுபயிர் இனத்தெரிவு செய்யும் போது ஊடுபயிர் வளரத்தக்க மண், காலநிலை வலயத்திற்குப் பொருத்தமானதாகவும், சமூக பொருளாதார காரணிகளையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

2.தென்னைப்பயிரின் ஆரம்ப வளர்ச்சிக்கட்டம், மத்திய வளர்ச்சிக்கட்டம், இறுதி வளர்ச்சிக்கட்டம் என்பனவற்றிற்கு ஏற்ப பொருத்தமானதாகப் பயிரின் வயது அதன் அங்குரத் தொகுதியின் வளர்ச்சியின் அளவு என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். குட்டையான பற்றையாக வளரும் இனங்கள் சிறப்பானது.

3. நிழல் விரும்பாத அல்லது சூரிய ஒளித் தூண்டற்பேறு அதிகமாக விளைச்சலைப் பாதிக்கும் பயிர்வகை தவிர்க்கப்படல் வேண்டும்.

4.தென்னைப்பயிருடன் நிலம், மண்ணீரம், சூரியஒளி, என்பவற்றிற்குப் போட்டியாக வளர்ந்து தென்னை விளைச்சலைக் குறைக்கவல்ல பயிரைத் தெரிவு செய்யலாகாது. அதாவது தென்னையின் ஆரம்ப வளர்ச்சிப் பருவ கட்டத்துள் மர முந்திரிகை , மா,வன மரங்கள் பயிரிடலாகாது.

5. ஊடுபயிரின் பயிரியல் செய்கைகள், ஒன்றிற்கு மற்றது முரணான நலன் கொடுப்பதாய் இருப்பின் அத்தகைய பயிர்களைத் தெரிவு செய்யலாகாது.

6.பழைய தோட்டங்களில் 10 அடி சுற்று வட்டத்திற்கு அதிகமாக வேர்த்தொகுதியோ அல்லது அங்குரத் தொகுதியோ, உடைய பயிர்களையும் புதிதாக அல்லது மீள்நடுகை செய்யும் போது ஒழுங்கை முறை நடுகை (30x17)மேற்கொள்ளும் போது30'வரையான இடைவெளி நிரைகளில், தென்னை சூரியன் உதித்து மறையும் திசையில் நடப்படுவதால் 18'வரை வேர்,அல்லது அங்குரத் தொகுதி கொண்ட பயிர்த் தெரிவு செய்யப்படலாம்.

7. பிரதேசத்தில் கிடைக்கும் விளைச்சலை சந்தைப்படுத்தல், பதப்படுத்தல், மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகளையும் கவனத்தில் கொண்டே பயிர் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

8. தென்னைப்பயிர் மற்றும் ஊடு பயிர்இரண்டுக்கும் தேவையான மண்போசணிகளைச் சிபார்சு செய்த அளவில் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். பசளைப்பிரயோகம் தவறினால் தென்னை மற்றும் ஊடுபயிரின் விளைச்சலும் கணிசமாகக் குறையும்.

9. நீர், சூரியவெளிச்சம், மண்,பயிர்ப் போசணிகளில் ஒன்றுக்கொன்று போட்டியிடா வண்ணமும் பயிரியல் நடவடிக்கை மேற்கொள்ள வசதியாகவும் தென்னை நிரைகளுக்கிடையே பொருத்தமாக நடுகை மாதிரியைத் தெரிவு செய்தல் வேண்டும்.

10. நடுகை செய்யும் போது நிரைகள் கிழக்கு மேற்காக அமைக்கப் படுதலால் கூடிய சூரியவெளிச்சம் பயிர்களுக்குக் கிடைக்கும்.

11. தென்னைப்பயிரிலிருந்து 7 அடி பிரதேசத்துள் எப்பயிரும் செய்கை பண்ணப்படலாகாது.

12. நீர்ப்பாசனம், பசளைப்பிரயோகம் என்பன ஊடுபயிருக்கு கிரமமாக மேற்கொள்வது அவசியமாகும்.

13. தென்னந் தோட்டத்தினுள் பசளையிடல், அறுவடை,பொச்சுக் குழி அமைத்தல போன்றவற்றிற்குப் போதிய இடைவெளிகள் தவிர்த்தே ஊடுபயிரிடல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**வரண்ட வலயத்தில் சிறப்பாக மேற்கொள்ளத்தக்க ஊடுபயிர்கள்:-**

மிளகாய், கிழங்குப் பயிர், அவரைப்பயிர், தானியப்பயிர், வாழை, கால்நடைக்கான புற்கள், இலைவகை

**பல்லாண்டுப் பயிர்கள்:-**

வாழை, பப்பாசி, கொடித் தோடை, எலுமிச்சை, லெமன்,லெமனீயம்

**மானிய உதவியில்லாமல் நடத்தக்கவை:-**

கொய்யா,மாதுளை,மா,மரமுந்திரிகை

**ஊடுபயிர்ச் செய்கை மேற் கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்:-**

1. ஊடு பயிரிடல் மீதான ஆரம்ப மற்றும்பராமரிப்புச்செலவுகள் அதிகம், இதனால் குறைந்தளவு நிலப் பரப்பில் மட்டுமே மேற்கொள்ளப் படலாம்.

2. பராமரித்தல் வேலைகளுக்கு அதிக கூலியாள் தேவை.

3. கால் நடையால் சேதம் விளையாது பாதுகாப்பு மேற்கொள்ளல் அவசியம். இதனால் சிறந்த கால் நடைவளர்ப்புடன் ஊடுபயிர் மேற் கொள்வது சிரமம்.

4. மண்ணீர் மற்றும் பயிர்ப்போசணிகள் ஊடுபயிருக்கு வேறாக பிரயோகிக்கப்படாவிடில் தென்னை விளைச்சல் வெகுவாகக் குறையும்.

5. தென்னங் கீற்றுக்கள் காற்றில் அடிபட்டு விழும்போது தென்னையை அண்மித்துள்ள ஊடுபயிர் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது.

**ஊடுபயிர்ச்செய்கைக்கான மாதிரி அமைப்புக்கள்:-**

1. ஏற்கனவே 22' தொடக்கம் 26' வரை மேற்கொள்ளப்பட்ட தென்னங் காணிகளுக்கான அமைப்பு புதிதாக ஊடுபயிர் மேற்கொள்ளும் நோக்கத்தோடு 28' தொடக்கம் 30, வரையான நீள்சதுர முறையில் கிழக்கு மேற்காக நிரைகளில் நடப்படும் காணிகளுள் ஊடுபயிரிடல் அமைப்பு சிறிது வேறுபடும்.

2. ஊடுபயிரிடல் எப்போதும் சூரிய வெளிச்சத்தை அதிகம் பெறத்தக்க கிழக்கு மேற்கு திசையில் அமைந்த நிரைகளில் மேற்கொள்ளப்படுதல் அவசியம்.


3. மண் அமைப்பின் இடைவெளிக்கு ஏற்ப பிரதேசத்திற்கேற்ப தென்னந் தோட்டத்தில் தாழ்ந்த பிரதேசம் வாழை போன்ற பயிர்களும், நடுத்தர உயரமான பிரதேசம் எலுமிச்சை கொடித் தோடை, போன்ற வரட்சியைத் தாங்காத பயிர்களும், மேட்டுப் பிரதேசங்களில் நீண்ட வேர்த் தொகுதி கொண்டதும், வரட்சியைத் தாங்கவல்ல மா,மாதுளை,கொய்யா, மரமுந்திரிகை, போன்ற பயிர்களும் நடுகை செய்தலுக்கு தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

4. ஒவ்வொரு பயிரின் வளர்ச்சியடையும் இயல்புக்கும் வேர்த்தொகுதியின் இயல்பிற்கும் அமைவாக ஊடுபயிருக்கான நடுகை இடைவெளியைத் தெரிவு செய்வதோடு ஒரே துண்டத் துக்குள் ஒன்றிற்கு மேற்பட்ட பயிர்ச்செய்கை பண்ண த்தக்க நாம் அவற்றின் பராமரிப்பு பயிரியல் செய்முறைகளுக் கேற்ப திட்டமிட்டு நடுகை மேற்கொள்ளப்ப டுதலும் அவசியம்.


5. வரண்ட வலயத்தில் தென்னையின் கீழ் ஊடுபயிர் செய்யத்தக்க சில மாதிரி அமைப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இவை பயிரியல் காரணங்களுக்காக ஏற்றமாதிரி செய்யக் கூடியன.எனவே தென்னைச் செய் கையில் ஈடுபடும் விவசாயிகள் முடியுமானவரை ஊடுபயிர்களை செய்கை பண்ணி அதிலிருந்து உங்களது வருமானத்தை பெருக்குவோமானால் தென்னைச் செய்கையாளர்கள் பொருளாதாரத்தில் தன்னிறைவு காணலாம் அல்லவா? தென்னங்காணிகளில் ஊடுபயிரிட்டு நன்மை பெறுவோமாக.

## நீர்ப்பாசன முறைகள்


**01.வரம்பு சால் பாசனம்**




**02. துளி நீர்ப்பாசனம்**




**03.தூறல் நீர்ப்பாசனம்:-**



# ஞானேந்திராவின் ஆட்சியை கண்டித்து நேபாளத்தில் மக்கள் ஆர்ப்பட்டம்



(காத்மாண்டு)

நேபாளத்தில் மன்னர் ஞானேந்திராவினால் கொண்டு வந்துள்ள அவசரநிலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்த, எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். நேபாளத்தில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஷெர்பக தூர்துபா தலைமையிலான ஆட்சியைக் கலைத்த மன்னர் ஞானேந்திரா, தொடர்ந்தும் பல கடும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார்.

அதேநேரத்தில், மன்னரைக் கண்டித்தும், மன்னராட்சி முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் சில எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டங்கள், மற்றும் போராட்டங்களை நடத்தி வருகின்றன.

நேபாளத்தில் கடந்த வெள்ளியன்று 55 வது ஜனநாயக தினம் கொண்டாடப்பட்டது. அவசரநிலைப் பிர்கடனம் செய்யப்பட்ட பின்பு கொண்டாடப்பட்ட ஜனநாயக தினம் என்பதால், அன்று நேபாளத்தில் பலகட்சி ஆட்சிமுறையை மீண்டும் கொண்டுவர வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தின. காத்மாண்டு, பொக்கரா, தங்கதி, தனுஷாந்த் மற்றும் திபயால் ஆகிய இடங்களில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற நூற்றுக்கும் அதிகமான தொண்டர்களை பொலிசார் கைது செய்தனர்.

இதற்கிடையில், 55வது ஜனநாய தினத்தை முன்னிட்டு விருந்து நிகழ்ச்சிக்கும் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மன்னர் ஞானேந்திரா இதில் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். ஆனால், வெளிநாடுகளைச்சேர்ந்த செய்தியாளர்கள் உட்பட பத்திரிகையாளர்கள் பலர் இந்த விருந்து நிகழ்ச்சியைப் புறக்கணித்தனர்.

# உலக செய்திகள்

## கச்சத்தீவு அந்தோணியார் கோயில் கொடியேற்றம்

(ராமேஸ்வரம்)

இந்தியா, இலங்கை கிறிஸ்தவர்கள் இணைந்து கொண்டாடும் கச்சத்தீவு புனித அந்தோணியார் கோயில் திருவிழா நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் தொடங்கியது. நெடுந்தீவு பங்கு தந்தை எபினேசர் இரத்தினம், பாம்பன் பங்கு தந்தை அமல்ராஜ் ஆகியோர் கொடியேற்றி விழாவை தொடங்கி வைத்தனர்.

நெடுந்தீவு சப், கலெக்டர் பேட்ரிக், இலங்கை கிறிஸ்தவர்கள், பாம்பன், தங்கச்சிமடம், ராமேஸ்வரம் பங்கு கிறிஸ்தவர்கள் பங்கேற்றனர்.

## ஈ-ராக்கில் கார் குண்டு வெடித்ததில் இருவர் உடல் சிதறிப் பலி!

(பகுபா)

ஈராக்கில் பகுபா நகரில் நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த கார்க் குண்டு வெடித்ததில் இரண்டு பேர் பலியாயினர்.

ஈராக்கில் சதாம் ஆட்சி வீழ்ந்த பின் அங்கு தங்கியுள்ள வெளிநாட்டுப் படைகள் வெளியேறக்கோரி, சதாம் ஆதரவு கெரில்லாக்கள் பல்வேறு நாசவேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.தேர்தல் நடந்த பிறகு நிலைமை சகஜமாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கார் குண்டு வெடிப்புகள் தொடர்கதையாகி விட்டன. பகுபா நகரில் நேற்று முன்தினம் தேசிய பாதுகாப்பு தலைமையகத்தின் அருகே கார் குண்டு வெடித்ததில் பாதுகாப்பு படை வீரர் ஒருவர் உட்பட இரண்டு பேர் பலியாயினர். இரண்டு பேர் படுகாயமடைந்தனர்.



அவுஸ்ரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் இருந்து ஏராளமான வெளிநாட்டு பறவைகள் சிவகாசி அருகேயுள்ள சங்கரபாண்டியாபுரத்திற்கு வந்துள்ளன.

## வங்கதேசத்தில் படகு கவிழ்ந்து 36 பேர் பலி, 100 பேரைக் காணவில்லை

(தாக்க)

வங்கதேசத் தலைநகர் தாக்காவில் உள்ள நாராயன்கேங் மாவட்டத்தின் பட்டுல்லா பகுதியில் உள்ள ஒரு ஆற்றில் சென்ற படகு தலைகீழாகக் கவிழ்ந்ததில் 36 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 100 பேரின் நிலை பற்றித்தெரியவில்லை. இதையடுத்து பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடுமென வங்கதேச மக்கள் அஞ்சப்படுகிவதாகத் தெரிவிக்கின்றனர்.

## கரப்பான் பூச்சி தொல்லைக்கு புதியவழி கண்டுபிடிப்பு

(வாஷிங்டன்)

வீடுகளில் தொல்லை தரும் கரப்பான் பூச்சிகளை கொல்வதற்கு பூச்சுக் கொல்லி மருந்துகளுக்கு பதிலாக புதிய வழியை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

பெரும்பாலான வீடுகளில் கரப்பான் பூச்சிகள் இருப்பது வழக்கம். குறிப்பாக சமையலறை மற்றும் கழிப்பறைகளில் கரப்பான் பூச்சிகள் கொடுக்கும் தொல்லைகள் அதிகம். இவை கிராமப்புறங்களைக்காட்டிலும் நகர்ப்புறங்களில்தான் அதிகப்படியாக காணப்படுகின்றன.

கரப்பான் பூச்சிகளை கொல்வதற்கு ஏராளமான பூச்சிக் கொல்லி மருத்துகள் தற்போது கடைகளில் விற்கப்படுகின்றன. ஆனால், அவை அனைத்துமே நச்சுத்தன்மை வாய்ந்தவை. உயிருக்கு கேடு விளையும் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். மாற்று வழி இல்லை என்பதால் அவற்றையே மக்கள் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை இருந்துவருகின்றது. இந்நிலையில், கரப்பான் பூச்சிகளை கொல்வதற்கு புதிய வழியை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.இதுகுறித்து நியூயார்க் நகரில் உள்ள பல்கலைக் கழக ஆராய்ச்சி அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

பொதுவாக பெண் கரப்பான் பூச்சிகளின் உடம்பில்ஒரு வித செக்ஸி செண்ட் எனப்படும் மோகத்தை தூண்டும் வாசனை உள்ளது. இந்த வாசனை முகர்வதாலேயே ஆண் கரப்பான் பூச்சிகள் அனைத்தும் பெண் கரப்பான் பூச்சிகள் இருக்குமிடத்தை நோக்கிச் செல்கின்றன.

பெண் கரப்பான் பூச்சிகளின் உடம்பில் இருக்கும் அந்த செக்சி வாசனைப் பொருள் என்ன என்பதை தற்போது ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்த வாசனைப் பொருளை பொறியில் வைத்து விட்டால் போதும். அதன் வாசனையால் கவரப்பட்டு பொறியை நோக்கி அனைத்து கரப்பான் பூச்சிகளும் வந்துவிடும். இதன்மூலம் அவை அனைத்தையும் பிடித்துவிட முடியும். கரப்பான் பூச்சிகளை பிடிக்க தற்போது இருக்கும் நச்சுத்தன்மை வாய்ந்த பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு இது சிறந்த மாற்றாக இருக்கும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய மாநில உறவுகளை பலப்படுத்த புதிய குழு

(புனே)

இந்திய மகராஷ்டிரா மாநிலம் புனேயில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீல் மத்திய மாநில அரசுகளுக்கிடையே உள்ள உறவு களை பரிசீலிக்க புதிய குழு ஒன்றை அமைக்கவிருப்பதாகத் தெரிவித்தார். மேலும் இந்த குழுவிற்கு யார் தலைவர் என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

## பாகிஸ்தானில் கலவரத்தில் ஈடுபட்ட 27 சன்னி முஸ்லிம்கள் கைது!

(குவெட்டா)

பாகிஸ்தானில் மொகரம் ஊர்வலத்தின் போது கலகம் விளைவிக்க திட்டமிட்ட 27 சன்னி முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டனர். பாகிஸ்தானில் ஷியா மற்றும் சன்னி முஸ்லிம்களுக்கிடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு பலர் பலியாவது வோடிக்கையாக உள்ளது. இந்த ஆண்டு முகரத்தின் போது ஷியா பிரிவு முஸ்லிம்கள் நடத்த இருந்த ஊர்வலத்தில் கலவரத்தை ஏற்படுத்த சன்னி பிரிவை சேர்ந்த இரண்டு தீவிரவாத அமைப்புகள் திட்டமிட்டிருந்தன.இதை தொடர்ந்து ஷ்கர் இருஜாங்வி என்ற தீவிரவாத அமைப்பை சேர்ந்த 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மொகரம் ஊர் வலத்தின் போது கலவரம் ஏதும் ஏற்படாமல் தடுக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## ஹரிரி கொலையை விசாரிக்க ஐ.நா.மன்றம் ஏற்பாடு

(ராய்ட்டர்)

லெபானின் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரிரி அவர்களின் கொலை தொடர்பாக விசாரிப்பதற்காக புலன் விசாரணைக்குழு ஒன்றை லெபனானுக்கு அனுப்பப்போவதாக ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலர் கொபி அனான் அறிவித்துள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் வேண்டுகோளுக்கு ஏற்பவே அவர் இதனை அறிவித்துள்ளார். ஆயினும் சர்சதேச விசாரணைக்குழு இந்த விவகாரத்தில் தலையிடுவதை லெபனான் எதிர்த்து வருகின்றது.

சர்வதேச சமூகம் குறிப்பாக பிரான்ஸ் நாட்டு அதிபர் லெபனான் அரசை புறக்கணித்து எதிர்க்கட்சியை ஊக்குவிப்பதாக லெபனான் பாதுகாப்பு அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஹரிரியின் கொலைக்கு சிரியா மற்றும் லெபனான் ஆகியவற்றின் அரசுகளே காரணம் என்று லெபனானில் பலர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அதேவேளை அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இராணுவத்தின் மூலம் அடக்கப்படும் என்று அரசு மிரட்டியுள்ளது.

## அணு ஆயுதப் பேச்சுக்கு வடகொரியா மறுப்பு

## உலக நாடுகள் கவலை

(ராய்ட்டர்)

வடகொரியாவின் நடவடிக்கைகள் தொடப்பாக அமெரிக்காவும், யப்பானும் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர்.அணுவாயுதப் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு வழங்க வடகொரியா மறுத்துள்ளமை குறித்து பல உலக நாடுகள் கவலை தெரிவித்துள்ளன. அமைச்சரவை மட்டத்திலான பேச்சு வார்த்தையொன்றையடுத்து அமெரிக்கா ஜப்பானுடன் வொஷிங்டனில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.வடகொரியப் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பை வழங்க மறுத்துள்ளமை குறித்து இரு நாடுகளும் கவலை தெரிவித்துள்ளதுடன் நிபந்தனைகளின்றி பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள முன் வர வேண்டும் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முஸ்லிம்கள் அஷூரா பண்டிகை கொண்டாட்டம்

(ராய்ட்டர்)

முஸ்லிம்கள் அஷுரா பண்டிகையைக் கொண்டாடுகின்றார்கள், அடிப்படையில் ஒரு ஷியா முஸ்லிம் பண்டிகையான அஷுரா. முகமது நபியின் பேரன் இமாம் ஹுசைன் இன்றைய ஈராக்கின் கர்பலா நகரில் உயிர்தியாகம் செய்ததைக் குறிக்கின்றது.

பதிமூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னனாள் நடந்த ஒரு யுத்தத்தில் இமாம் ஹுசைன் கொல்லப்பட்டது.

இஸ்லாத்திற்குள் பிளவு ஆளமாகி ஷியா மற்றும் சுனி என்று இஸ்லாத்திற்குள் இரு பிரிவுகள் உருவாகக் காரணமாக இருந்த சம்பவமாகும். ஈராக்கில் பள்ளி வாசல்களில் மூன்று தாக்குதல்கள் நடத்தப்பட்டு அஸுரா பண்டிகையைக்குலைத்துள்ளது.

இந்தப் பண்டிகையில் முக்கியத்துவம் மற்றும் அதன் வரலாறு குறித்து மத விவகாரங்களும் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரசாரம் ஓய்கிறது

(உத்வா)

பீகார், ஜார்கண்ட் மாநிலத்தில் மூன்றாம் கட்டத் தேர்தலின் பிரசாரம் இன்றோடு ஓய்கிறது. இதற்காக அனைத்து கட்சியினரும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா, ஜார்கண்ட் மாநிலத்தில் சூறாவெளி சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டிருந்தார். அவர் தனது பிரசாரத்தில் வகுப்புவாத சக்திகளிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## எங்கள் குரல்

அன்புடன் வாசக நெஞ்சங்களுக்கு!

**உங்கள் பிரதேசத்தில் அபிவிருத்தியில் பாரபட்சமா, புறக்கணிப்பா, ஊழல் மோசடிகளா? ஈழநாதம் எங்கள் குரலுக்கு தகுந்த ஆதாரங்களுடனும், புகைப்படங்களுடனும் அனுப்பி வையுங்கள் நிச்சயம் பிரசுரிப்போம்.**

அனுப்ப வேண்டிய முகவரி
ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு)
எங்கள் குரல்
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை.

## அம்பாறையில் நெல் அறுவடை செய்ய கூலியாட்கள் தேவை

(நமது நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக வேளாண்மையை அறுவடை செய்வதற்கான கூலி ஆட்கள் இன்றி நெற்செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அறுவடை செய்யும் கூலியாட்கள் சுனாமி தாக்கத்தால் பாதிக்கப்பட்டு அறுவடை உபகரணங்களை இழந்தும் இருக்கின்றனர்.

இதனால் வேளாண்மை அறுவடைக்குரிய கூலியாட்கள் இன்மையால் வேளாண்மைகள் வயலுடன் சேர்ந்து அழியும் நிலைக்கு உட்பட்டுள்ளது.

இத்தகைய நிலைமையை கருத்தில் கொண்டு சுனாமியால் பாதிக்கப்படாத பகுதியைச் சேர்ந்த அறுவடை கூலியாளர்கள் தயவு செய்து அம்பாறையில் அழிவடையும் வேளாண்மையை வெட்டித் தருமாறு கோருவதுடன், இவ்வாறு முன்வரும் கூலியாட்கள் தங்கியிருந்து அறுவடை செய்வதற்குரிய சகல ஏற்பாடுகளையும் எம்மால் செய்து தர முடியும் என அம்பாறை மாவட்ட வேளாண்மைச் செய்கையாளர்கள் ஈழநாதம் எங்கள் குரலூடாகக் கோரிக்கை விடுக்கின்றனர்.

## புதுமண்டபத்தடி கிராமிய வைத்தியசாலையை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கவும்.

### -கிராம மக்கள் வேண்டுகோள்.-

மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் அமைக்கப்பட்ட புதுமண்டபத்தடி கிராமிய வைத்திய சாலையானது சென்ற வருடம் மக்களின் பாரிய அழுத்தங்களுக்கு மத்தியில் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இக்கிராமிய வைத்தியசாலை நிரந்தரமாக இயங்குவதில்லை.

அதாவது இவ் வைத்தியசாலைக்கு நிரந்தரமான ஒரு வைத்தியர் இன்மையே இதற்கு முக்கிய காரணம் இவ் வைத்தியசாலையில் சேவையாற்றும் வைத்தியரே மண்முனை மேற்கில் அமைந்துள்ள ஏனைய கிராமிய வைத்திய சாலைகளான நாவற்காடு, மகிழவெட்டுவான் ஆகியவற்றிலும் சேவையாற்றி வருகின்றார்.

இதனால் புதுமண்டபத்தடி கிராமிய வைத்தியசாலை நிரந்தரமாக இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் இவ் வைத்தியசாலையின் சேவை வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரம் அதுவும் பகல் நேரம் மட்டுமே இச் சேவை நடாத்தப்படுவதால் மக்கள் வைத்திய சிகிச்சை பெறுவதில் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

இரவு வேளைகளில் திடீர் விபத்துக்களான தீவிபத்து, பாம்புக் கடி என்பன ஏற்பட்டால் பல கஷ்டங்களுக்கு மத்தியில் உழவு இயந்திரத்தில் ஏற்றி வவுணதீவில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் சோதனைக் கெடுபிடிகளுக்கு பதில் கூறி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்கின்ற போது சில வேளைகளில் விபத்துக்குள்ளானவரின் உயிர் பிரிகின்ற நிலைமையும் ஏற்படுகின்றது. அத்துடன் புதுமண்டபத்தடி கிராமிய வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்தியர் வயது முதிர்ந்த ஒருவராக இருப்பதால் இவ் வைத்தியர் அடிக்கடி சுகயீனமுறுவதால் அவரது வீட்டில் ஓய்வெடுக்கின்ற நிலைமையும் ஏற்படுகின்றது. இதனால் வாரத்தில் மூன்று நாட்கள் இடம் பெறும் வைத்தியசேவை ஸ்தம்பிக்கும் நிலை ஏற்படுகின்றது.

இத்தகைய நிலைப்பாட்டை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து புதுமண்டபத்தடி கிராமிய வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமித்து இவ் வைத்தியசாலையை நிரந்தரமாக இரவு பகலாக தனது சேவையை முன்கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுகாதார அதிகாரிகளுக்கு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

**எஸ்.பாஸ்கரன்**

## வவுணதீவு மணல்பிட்டி வீதியில் சேதமடைந்த பகுதியை புனரமைக்கவும்.

படுவான்கரை பகுதியில் அமைந்துள்ள மணல்பிட்டியில் இருந்து வவுணதீவு வரையிலான பிரதான வீதியானது 2003ம் ஆண்டு இறுதிப் பகுதியிலேயே புனரமைப்புச் செய்யப்பட்டது ஆனால் சென்ற ஆண்டு தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாக இவ்வீதியில் பல இடங்கள் சேதமடைந்து பள்ளமும், படுகுழியுமாகக் காட்சியளிப்பதுடன் வீதியில் ஊற்றிய தார் சேதமடைந்து கற்கள் வெளிக்கிளம்பிக் காணப்படுகின்றது.

அடுத்து இவ்வீதியிலே அமைந்துள்ள மதகு ஒன்று டிசம்பர் மாதம் ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் உடைந்துள்ளதுடன், வீதியும் சேதமடைந்துள்ளது. இவ்வீதியில் தற்காலிகமாக மண்மூடைகளையும், கிறவலையும் கொட்டி தமிழீழ விடுதலைப்புலிகள் இதனை ஓரளவு சீர் செய்து வீதியால் தொடர்ந்து போக்குவரத்தைச் செய்வதற்குரிய வாறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இவ்வீதியால் நூற்றுக் கணக்கான மக்களும், ஏனைய கனரக வாகனங்களும் செல்கின்றன. ஆனால் இவ்வீதி அடுத்து ஒரு பெரிய மழை பெய்யும் பட்சத்தில் மீண்டும் அதிகம் சேதமடையும் நிலை தோன்றும். அவ்வாறான நிலைமை தோன்றினால் வவுணதீவு, மணல்பிட்டி வீதியூடாக பயணம் மேற்கொள்ள முடியாத அவல நிலையே மக்களுக்கு ஏற்படும்.

இத்தகைய நிலைப்பாட்டை கருத்திற் கொண்டு மட் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் இவ்வீதியில் சேதமடைந்த பகுதியை சீர் செய்வதுடன் வெள்ளத்தால் உடைப்பெடுத்த மதகு அமைந்துள்ள வீதிப் பகுதியை மீண்டும் விரைவில் செப்பனிட்டு பயணிகள் போக்குவரத்தை விரைவில் சீர்படுத்துமாறு குறித்த அதிகாரிகளுக்கு பயணிகள் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றனர்.

*க. சாந்தன், இலுப்படிச்சேனை*

## மிகவும் போராட்டத்திற்கு மத்தியில் ஆஸி நியூசிலாந்தை வென்றது.

(வெலிங்டன்)

நியூசிலாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி மிகவும் போராடி 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து சுற்றுப் பயணம் வந்துள்ள அவுஸ்திரேலியா 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி நேற்று முன்தினம் வெலிங்டன் நகரில் பகலிரவு ஆட்டமாக நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. இரண்டாவது ஓவரில் கில்கிறிஸ்ட் (4)வெளியேறினார். பின்னர் ஹைடன், பொண்டிங் இணைந்து நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். கடந்த சில போட்டிகளில் மோசமாக ஆடி வந்த ஹைடன் அரைச்சதம் அடித்து தனது இழந்த பார்மை மீட்டார். இந் நிலையில் ஸ்டைரிஸ் வேகத்தில் தடுமாறத் தொடங்கியது அவுஸ்திரேலியா.

ஹைடன் (71), பொண்டிங் (61), மார்ட்டின் (7), கிளார்க் (0) ஆகியோரை அடுத்தடுத்து வெளியேற்றினார் ஸ்டைரிஸ். கடைசியில் சைமண்ட்ஸ் (53),ஹாக் (25) இணைந்து அணிக்கு கௌரமான ஸ்கோரை பெற்றுக் கொடுத்தனர். 50 ஓவர்களில் அவுஸ்திரேலியா 7 விக்கெட் இழப்புக்கு 236 ஓட்டங்கள் எடுத்தது.

எளிய இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து தொடக்கத்தில் விக்கெட்டுகளை இழந்தாலும் ஆஸ்லே (65) பொறுப்புடன் ஆடி சமாளித்தார். பின்னர் ஆறாவது விக்கெட்டுக்கு மார்ஷல், மெக்மில்லன் அபாரமாக ஆடினர். ஆனாலும் மெக்ராத் இவர் களுக்கு வினையாக அமைந்தார்.



இவரது வேகத்தில் மெக்மில்லன் (37), மார்ஷல் (76) வெளியேற, வெற்றி அவுஸ்திரேலியா வசம் வந்தது.

இறுதியில் 48. 4 ஓவர்களில் நியூசிலாந்து 226 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வி அடைந்தது. மெக்ராத் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன் மூலம் அவுஸ்திரேலியா தொடரில் 1-0 என்ற முன்னிலை பெற்றது.

## இந்தியா, பாகிஸ்தான் போட்டி அட்டவணை ஓரிரு தினங்களில்

(புதுடில்லி)

இந்தியா, பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி அட்டவணை சில தினங்களில் அறிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இம்மாத இறுதியில் இந்தியா வருகிறது. மூன்று டெஸ்ட், ஆறு ஒரு நாள் போட்டிகளில் விளையாடுகிறது. ஆகமதாபாத் நகரில் விளையாடுவது தொடர்பான சர்ச்சைகள் சுமூகமாக முடிந்தன. இந்தக் குழப்பம் காரணமாக, தொடர் தொடங்குவது ஒரு வாரம் தாமதமாகும் என அறிவிக்கப்பட்டது. தொடருக்கான புதிய அட்டவணை ஓரிரு தினங்களில் வெளியாகிறது.

இந்திய கிரிக்கெட் சபை செயலாளர் நாயர் நேற்று முன்தினம் அளித்தப் பேட்டியில், தொடர் அட்டவணையை இறுதி செய்யும் பணி நடந்து வருகிறது.அட்டவணை தயாரிக்கப்பட்டதும். பாகிஸ்தான் கிரிக்கெட்சபை ஒப்புதலுக்கு அனுப்பப்படும். அதன் பிறகு, அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும். எப்படியும் இரு தினங்களில் போட்டி அட்டவணை அறிவிக்கப்படும் என்றார்.




## பாகிஸ்தானின் புதிய துணைத் தலைவராக யூனிஸ் கான்

(கராச்சி)

இந்தியப் பயணத்துக்கான 16 பேர் பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இளம் வீரர்கள் அடங்கிய அணியின் துணைத் தலைவர் பொறுப்பில் இருந்து யூசப் யொகானா நீக்கப்பட்டு, யூனிஸ் கான் நியமிக்கப்பட்டுள்ளார்.

மூன்று டெஸ்ட், ஆறு ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்க பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இம்மாத இறுதியில் இந்தியா வருகிறது. இத்தொடருக்கான அணியை பாகிஸ்தான் கிரிக்கெட் தேர்வுக்குழு நேற்று முன்தினம் அறிவித்தது. துணைத் தலைவர் பொறுப்பில் இருந்து, முன்னணி வீரர் யூசுப் யொகானா நீக்கப்பட்டார். அவருக்குப் பதில் யூனிஸ் கான் புதிய துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த மாற்றத்துக்கான காரணம் அறிவிக்கப்படவில்லை. அடுத்த தலைவராக யூனிசை உருவாக்குவதற்கான திட்டம் என்று தேர்வுக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.சமீபத்தில் அவுஸ்திரேலியப் பயணம் சென்ற அணியில் இடம் பெற்றிருந்த இம்ரான் பர்கத், முகமது ஆசிப் நீக்கப்பட்டனர். காயமடைந்திருந்த முகமது சமி, முகமது கலில் இருவரும் உடற் தகுதியை நிருபித்து, அணியில் இடம் பிடித்துள்ளனர். இந்தியா சுழலுக்கு ஒத்துழைக்கும் என்பதால், டேனிஷ் கனேரியா தவிர, இரண்டாவது சுழற்பந்து வீச்சாளரான 34 வயது அர்ஷாத் கான் இடம் பிடிக்கிறார். 8 டெஸ்ட்களில் 30 விக்கெட் வீழ்த்தியவர் இவர். இன்சமாம், யோகனா தவிர மற்றவர்கள் இளம் வீரர்களே. அணியில் இடம் பெற்றுள்ள வீரர்களின் சராசரி வயது - 26.

இந்தியத் தொடர் சவாலானதாக இருக்கும். ஆனாலும், இளம் வீரர்கள் திறமையில் நம்பிக்கை வைத்து அணிக்குத் தேர்வு செய்திருக்கிறோம். விலகிக் கொள்வதாக அறிவித்து விட்டதால், அணித்தேர்வில் சோயப் அக்தர் பெயர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இந்த தொடரில் பாகிஸ்தான் அணிக்கு பந்து வீச்சுப் பயிற்சியாளராக வக்கார் யூனிஸ் நியமிக்கப்பட்டுள்ளார் என்கிறார் தேர்வுக் குழுத்தலைவர் வாசிம் பாரி.

இன்சமாம் உல் ஹக் (தலைவர்), யூனிஸ் கான் , தாபிக் உமர், சல்மான் பட், யாசிர் ஹமீத், யூசப் யோகனா, ஆசிம்கமால், சோயப் மாலிக், கம்ரான் அக்மல் (விக்கெட் காப்பாளர்), அர்ஷாத் கான், டேனிஷ் கனேரியா, அப்ரிதி, நவேத் உல் ஹசன், முகமது சமி, முகமது கலில் மற்றும் அப்துல் ரசாக் ஆகியோரே இந்திய சுற்றுப் பயணத்தில் இடம் பெறும் வீரர்களாவர் என பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

## சிந்தனைக்கு!



நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம். அதற்கு எமது வீரர்கள் இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

**தமிழீழத் தேசியத் தலைவர்**


# ஈழநாதம்

மக்கள் தினசரி — மட்டக்களப்பு பதிப்பு

**பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை**

**தொலைபேசி : 065-2226110,**

batti @ eezhanatham .com

**21.02.2005**


## பலனளிக்காத அரச வாக்குறுதிகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகள் புரிவதாக பல தரப்பினர்களால் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டும் இதுவரை முழுமையாகச் செயற்படவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசசார்பற்ற நிறுவனமான தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ள மக்களை மீள் குடியமர்த்தும் வகையில் சத்துருக்கொண்டானில் சுவிஸ் கிராமம் என்ற ஒரு மீள் குடியேற்றத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அமைச்சர்களின் வருகைகளும் ஆளும் தரப்பினர்களது வாக்குறுதிகளும் இதுவரை எவ்வித பிரயோசனத்தையும் ஏற்படுத்தவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமிக்குப் பின்னால் பல அமைச்சர்கள் வருகை தந்தனர். நிவாரணங்களைக் கொண்டு வந்து கொட்டுவோம், வீடு கட்டித் தருவோம் இப்படி எத்தனை வாக்குறுதிகளை மட்டக்களப்பு மாவட்டச் செயலக மண்டபத்தினுள் கூறி விட்டுப்போய் விட்டார்கள்.

ஆனால் மக்களுக்கு எதுவுமே இன்னும் நிறைவானதாக அமைய வில்லை. தற்போதும் அவர்களின் அவலங்கள் தொடர்கதையாகிக் கொண்டிருக்கின்றது.

தென்னிலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற நிவாரண உதவித் திட்டங்கள் எதுவும் தமிழர் தாயகத்தில் முறையாக முன்னெடுக்கப்படவில்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வாகரைப்பிரதேசம் முற்று முழுமையான பாதிப்பினை அடைந்துள்ளது.

இங்கு சிறிலங்கா அரசு கடைக்கண்ணால் கூடப் பார்க்கவில்லை. வாகரை மக்களுக்கான துயர்துடைப்புப் பணிகளை தமிழீழ விடுதலைப் புலிகளும் ,தமிழர் புனர்வாழ்வுக்கழகமுமே முழுஅளவில் மேற்கொண்டுள்ளனர்.

கடற்றொழிலையே முழுமையாக நம்பி வாழ்ந்த இந்த வாகரை மக்கள் தற்போது தொழில் பாதிக்கப்பட்டுள்ளதனால் பெரிதும் துன்பப்படுகின்றார்கள்.

இங்கு வைத்திய வசதிகள் இல்லை, போக்குவரத்து வசதிகள் இல்லை, மின்சாரவசதியில்லை, தொலைபேசி வசதியில்லை இவ்வாறு பல்வேறு பாதிப்புக்களையும் வாகரை மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.


எனவே இன்றய ஆளும் தரப்பு சுனாமி பேரழிவுக்குப் பின் மேற்கொள்ளப்படவேண்டிய மீள் கட்டுமானப் பணிகுறித்து அக்கறையுடன் சிந்திக்கவேண்டும். தென்னிலங்கையில் காலி, அம்பாந்தோட்ட மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட மீள் கட்டுமானப் பணிகளின் வேகம் இங்கு இல்லை. வெறுமனே கண்துடைப்பிற்கு கூட செயற்திட்டங்கள் வரையப்படவில்லை.

கடற்தொழிலை மீள ஆரம்பிப்பதற்கான வேலைத்திட்டங்கள் அரிதாகவே காணப்படுகின்றன. சர்வதேச சமூகமும் சுனாமிப் பேரழிவினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு முழு அளவில் நிவாரண உதவிகளை வழங்கிய போதும் அது எந்தளவிற்கு வடக்குக் கிழக்கிற்கு பயன் படுத்தப்பட்டிருக்கின்றது என்பது கேள்விக்குறி.

தென்னிலங்கையில் துரிதமாக புகையிரதப் பாதை புனரமைப்புச் செய்யப்பட்டு சேவையை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டது போன்று இங்கு வீதிப் புனரமைப்புப் பணிகள் கூட துரிதமாக மேற் கொள்ளப்படவில்லை. என்பது உண்மை.

எனவே எதிர்காலத்தின் அனர்த்த நிவாரண உதவிகள் தமிழ்மக்களை சென்றடையவேண்டுமானால் சிறிலங்காஅரசும், தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்த பொதுக் கட்டமைப்பினூடாக மேற்கொள்ளப்படவேண்டும்.


பல்வேறு மட்டங்களில் இந்தப் பொதுக் கட்டமைப்பு வலியுறுத்தப்பட்டுள்ள நிலையில் சிறிலங்கா அரசு இன்னுமின்னும் புறக்கணித்துச் செயற்படாது இயன்றவரை இதய சுத்தியுடன் செயற்பட்டு சகலபிரதேச அபிவிருத்திப் பணிகளுக்கும் ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்கவேண்டும்.



பன்சேனையில் தியாகி திலீபன் ஞாபகார்த்த மருத்துவமனையை திறப்பதற்கு ஆயத்தங்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருகின்றனர். இதனை முன்னிட்டு நேற்று பன்சேனை தியாகி திலீபன் மருத்துவமனை வளாகத்தை விடுதலைப் புலிகள் மற்றும் பொது மக்கள் இணைந்து சிரமதானம் மூலம் துப்பரவு செய்யும் பணியினை மேற்கொண்டனர். இதேவேளை பன்சேனை பகுதியிலிருந்து 15 கிலோ மீற்றர் தொலைவிலேயே வைத்தியசாலை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மாவீரர்களின் இழப்புக்கள் எங்களது விடுதலை போராட்டத்தில் பாரிய பலத்தை ஏற்படுத்தியுள்ளது !

### அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன்



(சர்வேஸ்வரன்)

மாவீரர்களின் இழப்புக்கள் எங்களது விடுதலைப்போராட்டத்தில் பாரிய பலத்தை ஏற்படுத்தியுள்ளது. நாளை நாங்களும் இந்த மண்ணில் எமது தேச விடுதலைக்காக எம்மை இழக்கத் தயாராக இருக்கின்றோம்.

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற உடும்பன்குள கோட்டப் படுகொலையின் 19வது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்தார்.

தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் பல்கலைக் கழக மாணவன் எஸ்.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் எமது இலட்சியத்தையோ, எமது இயக்கத்தையோ எந்தக் கொம்பனாலும் அழித்துவிட முடியாது. எமக்கென ஒரு தலைவர் இருக்கின்றார் அவர் நிச்சயம் விடுதலையைப் பெற்றுத் தருவார்.இன்றைய நாள் அம்பாறை மாவட்டத்திற்கு சோகம் நிறைந்த நாள் குறிப்பாக உடும்பன் குளப் படுகொலை எமது அம்பாறை மாவட்டத்தில் கறையை ஏற்படுத்திய நாள்! உடும்பன்குளப் பிரதேசம் , கஞ்சிகுடியாறு பிரதேசம், தங்கவேலாயுதபுர பிரதேசம்,ஆகியன சேனைப் பயிர்ச்செய்கையையும், நெற்பயிர்ச்செய்கையினையும் தொழிலாகக் கொண்டு வாழும் மக்கள் நிறைந்த பிரதேசம்

எனவே வளம் மிக்க அந்தப் பிரதேசத்தை ஆக்கிரமிக்க வேண்டுமென்ற நோக்கோடு இன்னுமொரு சமூகமக்களைத் தூண்டி அந்தச் சமூகமக்களினூடாக சிறிலங்கா அரசு எங்களுக்குள்ளே பாரிய பிளவை ஏற்படுத்த முனைந்தது. அதனூடாக 136க்கு மேற்பட்ட எங்களுடைய உறவுகளை இழந்து இன்று 19வது ஆண்டு நிறைவாகும்.

இந்தப் படுகொலை நிகழ்ந்த மறுகணமே அப்பிரதேசத் தை எங்களால் கைப்பற்ற முடிந்தது. அது எவ்வாறென்றால் அங்குள்ள மக்கள் அங்கு இடம்பெற்ற இழப்புக்களை பெரிதுபடுத்தாமல் தங்களுடைய தேசியத்தைக்காக்க உறுதியாக நின்றார்கள். அதன்பயனாக தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு, உடும்பன்குளம், போன்ற இடங்கள் தமிழர்களின் படையின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசமாக மாறியுள்ளது.

எமது பிரதேசங்களில் மொழியை, கல்வியை, கலை கலாசாரங்களை ஆக்கிரமித்த இச் சிறிலங்கா அரசு இப்பொழுது எம் தமிழ் மக்களின் மனங்களை ஆக்கிரமிக்க முனைகின்றது. அன்று உடும்பன் குளப்படுகொலையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய்கள் இன்று சுனாமி நிவாரணப் பொருட்களுடன் சிரித்த முகத்துடன் இருக்கின்றார்கள்.

அவர்கள் முகமூடி போட்ட முகத்துடன் இருக்கின்றார்கள் நாளை அவர்கள் இன்னுமொரு உடும்பன்குளப் படுகொலையை நிகழ்த்தத் தயாராக இருக்கின்றார்கள் என்பதை அண்மையில் வெலிக்கந்தையில் இடம் பெற்ற சம்பவம் கட்டியம் கூறியிருக்கின்றது.

இதில் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் சந்திரநேரு அவர்கள் அம்பாறை மண்ணை ஆக்கிரமித்திருந்த சிறிலங்காப் படையினரை வெளியேற்றுவதற்கும் அம்பாறை மண்ணைக் காப்பாற்றுவதற்கும் எங்களுடன் இணைந்து பல ஒத்தாசைகளைப் புரிந்தவர். அது போலவே மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் கௌசல்யன் அவர்கள் அம்பாறை மாவட்ட மக்களில் பற்று வைத்திருந்தார்.

## சர்வோதய அமைப்பு கெயர் நிறுவனம் துப்பரவுப் பணியில்

(துஷி)

அம்பாறை மாவட்டத்தில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கல்முனை மாவட்ட சர்வோதய அமைப்பினரும், கெயர் நிறுவனத்தினரும் துப்பரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.இப்பணியில் ஈடுபட்டுள்ளோருக்கு நாளொன்றுக்கு 300 ரூபாயினை வழங்கிவருகின்றனர். அத்துடன் அம்பாறை மாவட்டத்திலுள்ள சர்வோதய கிராமங்கள் 32 ற்கு வீடுகள், மற்றும் மலசலகூட வசதி குடிநீர் வசதிகளை அமைத்துக் கொடுக்கவும் முன்வந்துள்ளனர்.

திருக்கோவில் பிரதேசத்தில் அகதிகளாய் தஞ்சமடைந்துள்ளோர்கள் தற்காலிகமாக குடியமர்த்தப்படுவதற்காக 200 தற்காலிக கூடாரப் படங்குகளையும் வழங்கியுள்ளனர். அத்துடன் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சர்வோதய முன்பள்ளிகளை மீண்டும் இயங்கச் செய்து சிறார்களுக்கான போஷாக்கு உணவுகளையும் வழங்கி வருகின்றனர். இதேவேளை அம்பாறை மாவட்ட அகதி முகாம்களில் 10 பேர் கொண்ட சர்வோதய சுகாதாரத் தொண்டர்கள் முகாம்களை நிறுவி மக்களின் சுகாதார நலன்களையும் கவனித்து வருவதாக கல்முனை மாவட்ட சர்வோதய இணைப்பாளர் திருமதி சத்தியகைலேஸ்வரி தெரிவித்தார்.



கடல்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு அட்டாளைச்சேனை மையவாடி முகாமில் உள்ள முஸ்லிம் குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உலர் உணவு அல்லாத பொருட்களை வழங்குவதைக் காணலாம். (படம் - சரவணன்)

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham




அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜோர்ச் புஷ் (சீனியர்), பில்கிளின்டன் ஆகியோர் நேற்று கொழும்பை வந்தடைந்த போது..

# மன்னார் பாடசாலை திறப்பு விழா நிகழ்வில் படையினர் கெடுபிடி!

(நமது நிருபர்)

மன்னார் மத்திய மகா வித்தியாலய உயர்மாடிக் கட்டத் திறப்பு விழாவிற்கு கவச வாகனம் சகிதம் பெருமளவிலான சிறிலங்கா படையினரும், பொலிசாரும் குவிக்கப்பட்டதால் மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது. இதில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் கலந்து கொண்டமையாலேயே இந்நிலை ஏற்பட்டது.

சனிக்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர், மாணவிகள், பெற்றோர் ஆகியோர் கடுமையாக உடற்சோதனை செய்யப்பட்ட பின்பே உட்செல்லுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் மாணவர்கள், பெற்றோர்கள் பதற்றம் அடைந்திருந்ததுடன், பெரும் விசனம் அடைந்து சிலர் வீட்டுக்குச் சென்றனர். மேலும் அங்கு படம் எடுக்கச் சென்ற செய்தியாளர்கள் தடுக்கப்பட்டதுடன் அவர்களுடன் படையினர் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர். இந்நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர், கோட்டக்கல்விப் பணிப்பாளர், திட்டப் பணிப்பாளர், நானாட்டான் பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்ட போதிலும் மாணவர், பெற்றோர் மீதான உடற்சோதனைக்கு எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. மேலும் இந்நிகழ்விற்கு தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழ்க் கூட்டமைப்பினர் அழைக்கப்பட்டிருந்த போதும் எவரும் கலந்துகொள்ளவில்லை.

இப்பாடசாலை நிகழ்விற்கு இவ்வாறான வேண்டப்படாத செயற்பாடுகளை மேற்கொண்டமைக்காகவும், மாணவர்கள் உடற்சோதனைக்கு உட்பட்டமைக்காகவும் மன்னார் வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தொழிற்சங்க இணையம், மக்கள் அமைப்புக்கள், தமிழ் மாணவர் ஒன்றியம் என்பன கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

# கல்முனை சிறுவர்கள் நிகழ்வில் மூவினத்தோர் நிகழ்ச்சி

(துஷி)

கல்முனை உயிர் பிழைத்தோர் உண்டிறியம் கடல் கோளினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களது உளநலத்தை மேம்படுத்தும் முகமாக சிறுவர் கலை. கலாசார நிகழ்ச்சியொன்றினை நேற்று கல்முனையில் நடாத்தியது.

கல்முனை கிறிஸ்தவ இல்லத்தில் நேற்று பி.ப.2.30 மணியளவில் இந்நிகழ்வுகள் நடைபெற்றது. இதில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் கலை, கலாசார நிகழ்வுகள் என்பன நடைபெற்றது. இந்நிகழ்வில் பெரிய நீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையான சிறுவர்கள் கலந்துகொண்டனர். கலந்து கொண்ட சிறார்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

# பொது விழாக்களை தவிர்க்குமாறு பணிப்புரை

(நமதுநிருபர்)

அரசாங்கப் பாடசாலைகளில் இந்த ஆண்டில் முதலாம் தவணைக்காலப் பகுதிகளில் பொதுவிழாக்களை நடத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு சகல பாடசாலை அதிபர்களுக்கும் கல்வியமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

இயற்கை அனர்த்தத்தினால் ஏற்பட்ட அழுத்தங்கள் மத்தியில் இப்படியான பொதுவிழாக்களை நடத்துவது பொருத்தமற்றது என்பதற்காக இவ்வாறான விழாக்களை பாடசாலைகளில் நடத்துவதில்லை என்று கல்வியமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் பாடசாலைகளில் மெய்வல்லுனர் போட்டிகளை மாத்திரம் நடத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்குவதுடன் அகில இலங்கைப் போட்டிகளிலும் பிரவேசிக்கச் செய்யும் ஏற்பாடுகளைச் செய்யுமாறும் கல்வியமைச்சு அதிபர்களைக் கேட்டுள்ளது.

## கடும் பாதுகாப்பு

(நமது நிருபர்)

தேசவிரோதக் கும்பல்கள் காயமடைந்து பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து கடும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வெலிக்கந்தைப் பிரதேசத்தில் நேற்று அதிகளவு படையினரும் பொலிசாரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

# தேங்காய் விலை அதிகரிப்பு!

(எஸ்.சர்வேஸ்வரன்)

சுனாமியின் பின்னர் திருக்கோவில் பிரதேச வர்த்தக நிலையங்களில் தேங்காய்களின் விலை திடீரென அதிகரித்துள்ளது. தேங்காய் ஒன்றின் விலை 20 ரூபா தொடக்கம் 28 ரூபா வரை விற்கப்படுகின்றது. இதனால் மக்கள் கவலை அடைந்துள்ளனர்.

### அமெரிக்க...

இக்கப்பல் 200 அதிகாரிகளையும் 1200 துருப்பினரையும் கொள்ளக்கூடியது எனவும் தெரிய வருகிறது. பாலைவனக் கேடையம், பாலைவனப் புயல் நடவடிக்கையிலும் இக்கப்பல் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

### சொல்ஹெய்ம்...

ள்ளனர்.

இவர் ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற பகுதிகளைச் சென்று பார்வையிடுவதுடன் மாவட்டத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெறும் உயர்மட்ட மாநாட்டிலும் கலந்துகொள்ளவுள்ளதுடன் மாவட்டத்தின் நிலைமை குறித்தும் ஆராயவுள்ளார்.

# ஜே.வி.பி. அரசோடு இணைந்திருக்கும் வரை ஆட்சியை வீழ்த்த முடியாது

## ஜே.வி.பி. அமைச்சர் சந்திரசேன

(மருதமுனை நிருபர்)

ஜே.வி.பி.அரசாங்கத்தோடு இருக்கும் வரை இந்த அரசை வீழ்த்துவதென்பது எட்டாக்கனியாகும். ஆழிப்பேரலை அனர்த்தத்தினையும் நிவாரணப் பணிகளையும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி சில எதிர்முகாம் அரசியல்வாதிகள் அரசைப் பலம் இழக்கச் செய்யலாம் என கனவு கண்டு கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு தெரிவித்தார் கடற்றொழில், நீரியல் வளத்துறை அமைச்சர் சந்திரசேன விஜேசிங்க.

மீனவப்படகு உபகரணங்கள் சேதம் பற்றி உறுதிப்படுத்தி சான்றுப் பத்திரம் வழங்கும் நடமாடும் சேவையும், வெளிக்களப்படகு வழங்கும் வைபவமும் நேற்று முன்தினம் சாய்ந்தமருதில் ஆழ்கடல் மீன்பிடி வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் எஸ்.மீராசாய்பு தலைமையில் நடைபெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் சந்திரசேன விஜேசிங்க தொடர்ந்து உரையாற்றுகையில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு இலங்கை மீனவனும் தனது தொழிலை மீளச் செய்வதற்கு நிவாரணமும், நஷ்டஈடும் வழங்கப்படும் இதனை என்னால் உறுதியாகக் கூறமுடியும்.

ஜே.வி.பி.யின் ஆதரவுடன் ஆட்சிப் பீடம் ஏறி இருக்கும் அரசின் காலத்துக்குள் கடற்றொழிலில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்து மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதற்காகவே ஜே.வி.பி. அந்த அமைச்சை பொறுப்பெடுத்துள்ளது.

இத்தொழில் தொடர்பாக பல திட்டங்களை வெளிநாட்டு உதவியுடன் நடைமுறைப்படுத்த ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்ற துரதிஷ்டவசமாக சுனாமி அலைகள் நமது உறவுகளையும், உடைமைகளையும் காவு கொண்டு மீனவ நெஞ்சங்களை புரட்டி எடுத்துள்ளது என்றார்.

### வெலிக்கந்தை...

போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை மேற்படி துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தேசவிரோதக் கும்பலைச் சேர்ந்த மூவர் உயிரிழந்ததாக உறுதிப்படுத்தாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

### வீரகொட...

சிவலிங்கத்தின் மகனான சீனு அம்பாறை மாவட்டத்தின் 7ம் விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று பின்னர் நல்ல ஆரோக்கியமான நிலையில் இருந்ததாகவும் பின்னரே சிறுவனை வைத்தியர்கள் மறைத்து வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### அம்பாறை...

கல வைத்தியசாலைக்கு சென்ற போது தமண வைத்தியசாலை எனக் கூறி ஏமாற்றிக் கொண்டிருப்பதாகவும் தந்தை சிவலிங்கம் கவலையுடன் தெரிவித்தார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது சீனு என அழைக்கப்படும் கிசாந் என்பவரின் தலையில் காயம் ஏற்பட்டுள்ளது. அன்று பகல் 12மணிக்கு கல்முனை ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த போது மேலதிக சிகிச்சைக்காக இவர் அம்பாறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக சென்று பார்வையிட்ட போது சீனுவைக் காணவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக கடந்த ஜனவரி 6ம் திகதி கல்முனை பொலிஸ் நிலையத்திலும் 7ம் திகதி அக்கரைப்பற்று, 8ம் திகதி மட்டக்களப்பு பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் யுனிசெப், மனித உரிமை ஆணைக்குழு, ஐ.சி.ஆர்.சி. ஆகியவற்றிலும் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் தனது மகன் கிடைக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

### வாழைச்சேனை...

இது தொடர்பாக உடனடியாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டது.

போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் வாழைச்சேனை பொலிசாருக்கு இது பற்றி தகவல் கொடுத்ததையடுத்து பொலிசார் அந்த இடத்திற்குச் சென்று நிலைமையை கண்காணித்தனர்.

### ஓட்டமாவடியில்...

லைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஓட்டமாவடி துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் அண்மையில் தேவநாதன் எனும் நபரை சுட்டு கொன்றவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.


## உடனடி வேலைவாய்ப்பு

ஈழநாதம் [மட்டக்களப்பு பதிப்பு] பத்திரிகை நிறுவனத்தில் கீழ்காணும் பணி நிலைகளுக்கு ஆளணி கோரப்பட்டுள்ளது.

01. பணிநிலை:- உதவி ஆசிரியர்
கல்வித் தகமை:- க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்திருத்தல். மற்றும் பத்திரிகை துறை சார் அனுபவம் விசேட தகமையாக ஏற்கப்படும்.

02. பணிநிலை:- அலுவலகச் செய்தியாளர்.
கல்வித்தகமை:- க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்திருத்தல். பத்திரிகைதுறை சார் அனுப்வம் விசேட தகமையாக ஏற்றுக்கொள்ளப்படும்

தகமையுடைய ஆண்,பெண் இருபாலாரும் ஈழநாதம் அலுவலகத்துக்கு தகமை சான்றிதழ்களுடன் நேரில் வரவும்

தொடர்புகளுக்கு:- பொது முகாமையாளர்,
ஈழநாதம்
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை
தொலைபேசி 065.2226110

## ஈழநாதம் சந்தா கட்டண விபரம்

அஞ்சல் மூலம் ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) நாள் இதழ் வார இதழ் பெறவிரும்பும் சந்தாகாரர்களுக்கான கட்டண விபரம்

நாள் இதழ் வருடம் ஒன்றிற்கு அஞ்சல் செலவுடன் 3286

வார இதழ் வருடம் ஒன்றிற்கு அஞ்சல் செலவுடன் 754

நாள் இதழ் வார இதழுக்கான சந்தாவிபரம் அஞ்சல் செலவுடன்

நாள் இதழ் =3286

சந்தாதாரராக இணைய விரும்புவோர் ஈழநாதம் பிரதான வீதி கொக்கட்டிச்சோலை அல்லது 065.2226110 தொலைபேசியுடனோ தொடர்பு கொள்ளவும்


இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தால் 21.02.2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.